**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தற்போதைய அமைச்சரவைக்கு விடயங்கள் மற்றும் பணிகளை ஒப்படைத்தல்**

(விடயங்கள் மற்றும் பணிகளை ஒப்படைத்தல் தொடர்பாக 2289/43 ஆம் இலக்க மற்றும் 2022 யூலை மாதம் 22 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கு 2024 சனவரி மாதம் 19 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது)


| | | பக்க எண் |
|---|---|---|
| 1. | பாதுகாப்பு அமைச்சர் | 2 |
| 2. | நிதி, பொருளாதார உறுதிப்பாடு, மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் | 4 |
| 3. | தொழில்நுட்ப அமைச்சர் | 10 |
| 4. | மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சர் | 13 |
| 5. | துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானச்சேவைகள் அமைச்சர் | 17 |
| 6. | முதலீட்டு மேம்பாடு அமைச்சர் | 20 |
| 7. | பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் | 22 |
| 8. | கடற்றொழில் அமைச்சர் | 26 |
| 9. | கல்வி அமைச்சர் | 29 |
| 10. | போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் | 37 |
| 11. | வெகுசன ஊடக அமைச்சர் | 40 |
| 12. | சுகாதார அமைச்சர் | 43 |
| 13. | நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் | 48 |
| 14. | கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் | 51 |
| 15. | வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர் | 64 |
| 16. | நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல்யாப்பு மறுசீரமைப்பு அமைச்சர் | 66 |
| 17. | சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் | 71 |
| 18. | - நீக்கப்பட்டது | - |
| 19. | கைத்தொழில் அமைச்சர் | 74 |
| 20. | நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் | 78 |
| 21. | வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் | 84 |
| 22. | புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் | 87 |
| 23. | மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் | 91 |
| 24. | சுற்றாடல் அமைச்சர் | 94 |
| 25. | விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் | 96 |
| 26. | நீர்ப்பாசன அமைச்சர் | 99 |
| 27. | தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் | 102 |
| 28. | பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் | 106 |
| 29. | வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் | 108 |

அட்டவணை

## 01. பாதுகாப்பு அமைச்சர்

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| **கடமைகளும் பணிகளும்** | **திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்** |
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட அரச பாதுகாப்புத் தொடர்பிலான விடயத்துடனும் நிரல் ஐஐ இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைத்தல்<br>4. தேசிய பாதுகாப்பை | 1. பாதுகாப்புப் பதவிநிலைத் தலைவரின் அலுவலகம்<br>2. இலங்கைத் தரைப்படை<br>3. இலங்கைக் கடற்படை<br>4. இலங்கை வான்படை<br>5. அரச புலனாய்வுச் சேவை<br>6. சிவில் பாதுகாப்புத் திணைக்களம்<br>7. தேசிய பயிலிளவல் சிறப்பணி<br>8. இரசாயன ஆயுதங்கள் சமவாயத்தைச் செயற்படுத்தும் தேசிய அதிகாரசபை<br>9. சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்<br>10. பாதுகாப்புச் சேவைகள் கட்டளை, பதவிநிலைக் கல்லூரி<br>11. மிலோதா நிறுவனம் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகமாக<br>12. பாதுகாப்புச் சேவைகள் கல்லூரி<br>13. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்<br>14. தேசியப் பாதுகாப்பு கற்கைகள் நிறுவனம்<br>15. தேசியப் பாதுகாப்புக் கல்லூரி<br>16. ரக்னா ஆரக்சன லங்கா கம்பனி<br>17. இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம்<br>18. தேசிய பாதுகாப்பு நிதியம்<br>19. ரணவிருசேவை | • (2009ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க) பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரிச் சட்டம்<br>• (1949 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) தரைப்படைச் சட்டம்<br>• (1950 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க) கடற்படைச் சட்டம்<br>• (1949 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க) வான்படைச் சட்டம்<br>• (1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க) புறத்தொப்படைத்தல் சட்டம்<br>• (1956 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க) வெடி பொருட்கள் சட்டம்<br>• (1916 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) சுடுபடைக் கலன்கள் சட்டம்<br>• (1951 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) துப்பாக்கிச் சூட்டு வீச்சிடங்கள் மற்றும் இராணுவப் பயிற்சிச் சட்டம்<br>• (1985ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க) பயன்பாடுகள் மற்றும் குறைநிரப்புச் சட்டம்<br>• (1966ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க) தீங்குவிளைவிக்கும் ஆயுதங்கள் சட்டம்<br>• (2001ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க) கடற்கொள்ளைச் சட்டம்<br>• (1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க) பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்<br>• (1947 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க)பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் |

| | | |
|---|---|---|
| உறுதிசெய்தல்<br>5. உள்ளகப் பாதுகாப்பைப் பேணுதல்<br>6. அரசாங்க, உள்ளக பாதுகாப்பு தொடர்பிலான உளவுச் சேவைகளைப் பேணுதல்<br>7. நேசநாட்டுப் படைகளுடனான உறவுகள்<br>8. சர்வதேச மனிதாபிமான நடவடிக்கைகளுக்காக ஒத்துழைப்பு வழங்குதல்<br>9. வெடிமருந்துகளும் சுடுபடைக்கலன்களும் தொடர்பான அலுவல்கள்<br>10.வெளிச்சவீடுகளின் பராமரிப்பு தொடர்பான நடவடிக்கைகள் (துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான வெளிச்சவீடுகள் தவிர்ந்த)<br>11.பாதுகாப்புச் சேவை ஆளணியினருக்கு பாதுகாப்புக் கல்வியும் பின்படிப்புச் சேவைக் கல்வியும் பெற்றுக் கொடுத்தல்<br>12.பாதுகாப்புச் சேவை ஆளணியினருக்கான உயர்கல்வியைப் பெற்றுக்கொடுத்தல்<br>13.தனியார் பாதுகாப்புச் சேவைகள் தொடர்பிலான அலுவல்கள்<br>14.மீட்பு நடவடிக்கைகளும் கரையோரப் பாதுகாப்புச் சேவைகளின் நிருவாகமும்<br>15.புறத்தொப்படைத்தல் தொடர்பான நடவடிக்கை<br>16.வயதுமுதிர்ந்த போர்வீரர்கள், ஊனமுற்ற படைவீரர்கள் தொடர்பான அலுவல்கள்<br>17.காலநிலை மற்றும் வளிமண்டலவியல் சேவைகளை வழங்குதல்<br>18.வளிமண்டலவியல் ஆய்வும் அபிவிருத்தியும்<br>19.மண்சரிவு அனர்த்த முகாமைத்துவம் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட | அதிகாரசபை<br>20. அபி வெனுவென் அப்பி நிதியம்<br>21. வளிமண்டலவியல் திணைக்களம்.<br>22. அனர்த்த முகாமைத்துவ தேசிய மன்றம்<br>23. அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம்<br>24. தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்<br>25. தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பு | • (2007 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க) இரசாயன ஆயுதங்கள் சமவாயம் தொடர்பான சட்டம்<br>• (1981ஆம் ஆண்டின் 68ஆம் இலக்க) சேர் ஜோன் கொத்தலாவல அரச பாதுகாப்புப் பயிற்சிக் கல்லூரிச் சட்டம்<br>• (2008ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க)பாதுகாப்புச் சேவைகள் ஆணை மற்றும் பதவியணியினர் கல்லூரிச் சட்டம்<br>• (1999ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க) பயங்கரவாதிகளின் குண்டுத் தாக்குதல்களை முறியடித்தல் சட்டம்<br>• (2000ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க)கடல்சார் கடற் செலவின் பாதுகாப்புக்கு எதிரான சட்டமுறையற்ற செயல்களை முறியடித்தல் சட்டம்<br>• (1998ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க) தனியார் பாதுகாப்பு முகவர் நிலையங்கள் சட்டம்<br>• (2009ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க) கரையோரப் பாதுகாப்புத் திணைக்களச் சட்டம்<br>• (1999 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க) ரணவிரு சேவா அதிகாரசபைச் சட்டம்<br>• (2008ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க) அப்பி வெனுவென் அப்பி நிதியச் சட்டம்<br>• (2005ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க) இலங்கை அனர்த்த முகாமைச் சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

| | | |
|---|---|---|
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளல்<br>20.இயற்கை அனர்த்தங்கள் தொடர்பாக அவதானமாக இருத்தல் மற்றும் அதுபற்றி உரிய பிரிவுகளை அறிவுறுத்துதல்<br>21.இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனிதர்களால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்கள் தொடர்பாக அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைத்தல்<br>22.இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனிதர்களால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்களின்போது மீட்புப் பணிகளை மேற்கொள்ளல்<br>23.இயற்பை அனர்த்தங்களைத் தாக்குப்பிடிக்கும் வகையில் (திடமான ) நிர்மாணப் பணிகளை ஊக்குவித்தலும் தொழலிநுட்ப வழிகாட்டல்களையும் வழங்குதல்<br>24.வீடமைப்பு, நிர்மாணத்துறை பிரிவுகளுக்குப் பொருத்தமான தொழில்நுட்பம் தொடர்பான ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்<br>25.ஐஐ ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்குரிய பணிகளும்<br>26.ஐஐ ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களையும் கண்காணித்தல் | | |

**02. நிதி, பொருளாதார உறுதிப்பாடு, மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| **கடமைகளும் பணிகளும்** | **திணைக்களங்களும் நியதிச்சட்டநிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்** |
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையவும் தாபிக்கப்பட்ட நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் பற்றிய விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப | 1. தேசியத் திட்டமிடல் திணைக்களம்<br>2. கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்<br>3. வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்<br>4. அரச வளங்கள் முகாமைத்துவக் கூட்டுத்தாபனம்<br>5. பொதுத் திறைசேரி<br>6. அரச நிதிக் கொள்கைகள் திணைக்களம்<br>7. தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்<br>8. முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்<br>9. அரச நிதி திணைக்களம்<br>10. திறைசேரி நடவடிக்கைத் திணைக்களம்<br>11. அரச கணக்குகள் திணைக்களம்<br>12. வர்த்தக மற்றும் முதலீட்டுக கொள்கைகள் திணைக்களம்<br>13. தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம்<br>14. சட்டஅலுவல்கள் திணைக்களம்<br>15. முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம்<br>16. அபிவிருத்தி நிதித் திணைக்களம்<br>17. அரச தொழில்முயற்சிகள் திணைக்களம்<br>18. கொம்ரோலர் ஜெனரால் அலுவலகம்<br>19. உள்நாட்டு இறைவரித் திணைக்களம்<br>20. இலங்கைச் சுங்கம்<br>21. மதுவரித் திணைக்களம்<br>22. தேசிய லொத்தர் சபை<br>23. அபிவிருத்தி லொத்தர் சபை<br>24. மதிப்பீட்டுத் திணைக்களம்<br>25. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் | • ஒதுக்கீட்டுச் சட்டங்கள்<br>• (1956 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) சுங்கக் கட்டளைச் சட்டம்<br>• (1957 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க) வெளிநாட்டுக் கடன் சட்டம்<br>• (2007ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க)பற்றுக்கள் மீதான வரிச் சட்டம்<br>• (1998 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க)பந்தயங்கள் மற்றும் சூதாட்ட வரிச் சட்டம்<br>• (2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க) பொருளாதார சேவை கட்டளைச் சட்டம்<br>• (1891 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க) அரசாங்க சேவை பரஸ்பர சகாய நிதிச் சங்கக் கட்டளைச் சட்டம்<br>• 52ஆம் அத்தியாயமான மதுவரிக் கட்டளைச் சட்டம்<br>• (2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க) நிதிக் குத்தகைச் சட்டம்<br>• (2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க) நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடுதல் சட்டம்<br>• (2003ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க) நிதி முகாமை (பொறுப்புடைமை) சட்டம்<br>• (2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க) காப்புறுதித் தொழில்துறை ஒழுங்கு படுத்துதல் சட்டம்<br>• (!951 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க) லோகோர் சீமாட்டி நிதியச் சட்டம்<br>• (1923 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க) உள்ளூர் திறைசேரி |

| | | |
|---|---|---|
| முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைப்புச் செய்தல்<br>4. தேசியப் பொருளாதாரம் மற்றும் நிதிசார் கொள்கைகளையும் உபாயமுறைகளையும் ஆக்குதல்<br>5. தேசிய அபிவிருத்தி மற்றும் அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல்<br>6. அரசநிதி மற்றும் பாரியளவு நிதி முகாமைக் கொள்கைகளை வகுத்தமைத்தல்<br>7. பொருளாதாரப் பிரச்சினைக்கான காரணங்களை இனங்கண்டு அதற்குத் தேவையான உடனடி புத்துயிரப்புத் தீர்வுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துதல்<br>8. நாட்டினுள் நிரந்தர மற்றும் நிலைபேறான விருத்தியை ஏற்படுத்துவதற்குத் தேவையான பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகம்செய்தல், செயற்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்<br>9. தேசியக் கொள்கையிளை முறையாக நடைமுறைப்படுத்தும் பொறிமுறையை மேற்பார்வை செய்தல்<br>10. இருதரப்பு மற்றும் பல்தரப்பு வர்த்தக ஒப்பந்தங்கள் மற்றும் அவ் ஒப்பந்தங்களினுர்டாக ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்தல் உள்ளிட்ட | திணைக்களம்<br>26. நீக்கப்பட்டுள்ளது.<br>27. இலங்கை மத்திய வங்கி<br>28. சகல அரச வங்கிகள், நிதி நிறுவனங்கள், காப்புறுதி கம்பனிகள் மற்றும் அவற்றின் நிருவாகத்துக்குட்பட்ட கம்பனிகள் மற்றும் அதனோடிணைந்த நிறுவனங்கள்<br>29. இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு<br>30. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் நிர்வாகக் கம்பனிகளும் இணைக்கம்பனிகளும்<br>31. கடன் தகவல் பணியகம்<br>32. நீக்கப்பட்டுள்ளது.<br>33. இலங்கை பிணையங்கள் மற்றும் செலாவணி ஆணைக்குழு<br>34. இலங்கை கணக்குகள் மற்றும் கணக்கய்வு கட்டளை மதிப்பீட்டுச் சபை<br>35. இலங்கை பொதுப்பயன்பாட்டுச் சபை<br>36. இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்<br>37. வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்<br>38. அரச ஈட்டு முதலீட்டு வங்கி<br>39. பிரதேச அபிவிருத்தி வங்கி<br>40. வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு<br>41. குடிசன மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்<br>42. கொள்கைகள் கற்கைகள் நிறுவகம்<br>43. நிலைபேறான அபிவிருத்திச் சபை<br>44. நலன்புரி நலச் சபை<br>45. அரசாங்க சேவை பரஸ்பர சகாய நிதியம்<br>46. வேலைநிறுத்தங்கள், கலவரங்கள், சிவில் குழப்பங்கள் மற்றும் பயங்கரவாதம் தொடர்பான நிதியம்<br>47. தேசியக் காப்புறுதி பொறுப்பு நிதியம்<br>48. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்<br>49. லோகோர் சீமாட்டி நிதியம்<br>50. நீக்கப்பட்டுள்ளது.<br>51. நீக்கப்பட்டுள்ளது. | உண்டியல்கள் கட்டளைச் சட்டம்<br>• (2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க) நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டம்<br>• (2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க) பணம் தூய்தாக்கலைத் தடுத்தல் சட்டம்<br>• (1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வுத் தர நிர்ணயச் சட்டம்<br>• (1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) ஏற்றுமதி இறக்குமதி (கட்டுப்பாட்டுச்) சட்டம்<br>• (2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்<br>• (2008 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க) முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்<br>• (1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க) முத்திரை தீர்வைச் சட்டம்<br>• (2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க) பெறுமதிசேர் வரிச் சட்டம்<br>• (2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) நலன்புரி பிரதிலாபங்கள் சட்டம்<br>• (1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க)நிதிச் சட்டம்<br>• (2008 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க)சுற்றாடல் பாதுகாப்பு வரிச் சட்டம்<br>• (2008 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சபைச் சட்டம்<br>• (2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) இலங்கை பொதுப் பயன்பாட்டு |

| | | |
|---|---|---|
| சர்வதேச மற்றும வலய வர்த்தக ஒருமைப்பாட்டை இலகுபடுத்தும் மற்றும் இணைப்பாக்கம் செய்யும் கேந்திர நிலையமாகச் செயற்படுதல்<br>11.வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரித்தலும் நிதி வளங்களின் முகாமையும்<br>12.தேசிய வரவுசெலவு நடைமுறைப்படுத்தப் படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளலும் வரவுசெலவு ரீதியான நிதிக்கட்டுப்பாட்டின் வினைப்படுத்துகையும்<br>13.தேசிய வரிக் கொள்கையின் முகாமையும் அரச வருவாயின் வினைத்திறனான பயன்பாடும்<br>14.பொருளாதார அபிவிருத்திகாக அரச மற்றும் தனியார் துறையின் பணிகளை ஒருங்கிணைத்தல்<br>15.சர்வதேச முகவராண்மைளுடனான கூட்டிணைப்பும் பொருளாதார விருத்திக்காக வெளிநாட்டு வளங்களைச் ஈடுபடுத்தலும்<br>16.உதவிவழங்கும் அமைப்புகள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களுடனான பணிகளை மீளாய்வு செய்தல்<br>17.அரச நிதி ஒழுங்குவிதிகளின் வினைப்படுத்துகை<br>18.திரட்டு நிதியத்தின் முகாமை<br>19.வருமான முகவராண்மைகளின் முழுமையான கண்காணிப்பு | 52. தொலைத்தொடர்புகள் திணைக்களம்<br>53. வனசீவராசிகள் பொறுப்பு<br>54. இலங்கை வெகுசன ஊடகப் பயிற்சி நிறுவனம்<br>55. உள்ளக வர்த்தகத் திணைக்களம்<br>56. புரதச்சத்துடைய தானியப் பயிர்ச்செய்கை மற்றும் தானியங்கள் ஆராய்ச்சி உற்பத்தி அதிகாரசபை<br>57. மட்டுப்படுத்தப்பட்ட ஜனத்தா பேர்ட்டிலைசர் என்டர்பிரைசஸ்<br>58. சிறுவர்களைப் பாதுகாப்போம் தேசிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்<br>59. கீழுழைப்பு செயற்பாட்டு தொழில்முயற்சிகள் அல்லது கீழுழைப்பு பயன்பாட்டு சொத்துக்கள் உயிர்ப்பித்தல்(அகற்றுதல்) சட்டத்தின்கீழ் திறைசேரிச் செயலாளர் வசமாக்கப்பட்டுள்ள நிறுவனங்கள்<br>60. இலங்கை டெலிகொம் கம்பனி மற்றும் அதன் நிர்வாகக் கம்பனிகள் மற்றும் இணைக் கம்பனிகள்<br>61. கலம்பு லோட்டஸ் ரவர் மனேஜ்மென்ட் கம்பனி பிறைவேட் லிமிட்டெட்<br>62. நோர்த் சி லிமிட்டட<br>63. வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோச கம்பனி<br>64. கல்ஓயா பெருந்தோட்டக் (தனியார்) கம்பனி<br>65. தேசிய சோல்ட் கம்பனி<br>66. இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்<br>67. பரந்தன் இரசாயனக் கம்பனி<br>68. வரையறுக்கப்பட்ட பீ.சி.சி கம்பனி<br>69. அரச பொறியியல் கூட்டுத்தாபனம்<br>70. மஹிந்த ராஜபக்ஷ தேசிய ரெலி - சினிமா பூங்கா<br>71. வரையறுக்கப்பட்ட லங்கா ஜெனரல் டிரேடிங் கம்பனி<br>72. சஹஸ்யா இன்வெஸ்ட்மன்ட் லிமிடட்<br>73. தேசிய உபகரணங்கள் அமைப்பாண்மை | ஆணைக்குழுச் சட்டம்<br>• (1988 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க) இலங்கை கொள்கைகள் கற்கை நிறுவனச் சட்டம்<br>• (2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) பேண்தகு அபிவிருத்திச் சட்டம்<br>• (1997 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க) அபிவிருத்தி லொத்தர் சபைச் சட்டம்<br>• (1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தபனச் சட்டம்<br>• (2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) உள்நாட்டு அரசிறைச் சட்டம்<br>• (1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க) நிதிசார் நீதிச் சட்டம்<br>• (1971 ஆம் ஆண்டின் 30 இலக்க) தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம்<br>• (1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க) மக்கள் வங்கிச் சட்டம்<br>• (1938 ஆம் ஆண்டின் 53 இலக்க) இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம்<br>• (1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க) வங்கிச் சட்டம்<br>• (1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க)வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டம்<br>• (1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) வங்கிகளினால் அளிக்கப்படும் கடன்களை அறவிடும் (விசேட ஏற்பாட்டுச்) சட்டம்<br>• (1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க) இலங்கையின் பிணையங்கள் மற்றும் செலாவணி ஆணைக்குழுச் சட்டம்<br>• (2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க) பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டம் |

| | | |
|---|---|---|
| 20.அரச வங்கிகள் மற்றும் நிதிமுகவராண்மைகளை வழிநடத்தலும் தேவையான வழிகாட்டிகளை வழங்குதலும்<br>21.அரச செலவினங்களின் முகாமை<br>22.அரசாங்கத்தின் கொள்வனவுகள் தொடர்பிலான கொள்கைகள் மற்றும் வழிகாட்டுநெறிகளையும் ஒழுங்குவிதிகளையும் தயாரித்தலும் அதற்கான மதியுரை வழங்குதலும்<br>23.அனைத்து அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்கள், கட்டிடங்கள், காணிகள் போன்ற அரச சொத்துக்கள் தொடர்பான தகவல்களைப் பேணுதலும் அவ்வளங்களை வினைத்திறமையாகவும் பயனான முறையிலும் பயன்படுத்துவதற்கான திறமுறைகளைத் தயாரித்தலும்<br>24.திணைக்களங்கள் மற்றும் ஏனைய பொது நிதியத்தின் கண்காணிப்பு<br>25.அரச கணக்குக் குழுவின் அறிக்கைகள் மீதான திறைசேரிக் குறிப்புகளைப் பேணுதல்<br>26.அரச ஆளணி முகாமை மற்றும் சம்பளவிதிப்புப் பற்றிய ஆலோசனைச் சேவைகள்<br>27. இலங்கை மத்திய வங்கியுடனான ஒருங்கிணைப்பின் மூலம் நிதிக் கொள்கைகளைத் தயாரித்தலும் மற்றும் பேரினப் பொருளாதார முகாமைத்துவமும்<br>28.வருமானத்தைத் ஒன்றுதிரட்டுதல் மற்றும் | | • (2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) தேசியக் காப்புறுதி பொறுப்பு நிதியச் சட்டம்<br>• (1993 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்<br>• (1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) ஊழியர் சேமலாப நிதிச் சட்டம்<br>• (1989 ஆம் ஆண்டீன் 13 ஆம் இலக்க) உற்பத்தி வரிச் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்<br>• (1937 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) பதிவுசெய்யப்பட்ட பங்குமூல பிணையப பத்திரங்கள் கட்டளைச்சட்டம்<br>• (2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) கொடுப்பனவு மற்றும் நடுத்தீர்ப்பு முறைமைச் சட்டம்<br>• (2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க) நிதி வியாபார நிதியச் சட்டம்<br>• (2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்<br>• மதிப்பீட்டுக் கட்டளைச் சட்டம் (143 ஆம் அத்தியாயம்)<br>• (1961 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க) காப்புறுதிக் கூட்டுத்தாபனச் சட்டம்<br>• (1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) இலங்கை கடன் தகவல் பணியகச் சட்டம்<br>• (2016 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க) நுண்நிதியச் சட்டம்<br>• (1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க) நிதிக் கம்பனிகள் சட்டம்<br>• (1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்<br>• (1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க) இலங்கை அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டம்<br>• (2010 ஆம் ஆண்டின் 17 |

| | | |
|---|---|---|
| செலவு தொடர்பான தொடராய்வுகளை மேற்கொள்ளுதல்<br>29.திணைக்களங்களில் முகாமைத்துவக் கணக்காய்வு மேம்பாடு தொடர்பான வழிகாட்டல்களை வகுத்தமைத்தல்<br>30.காப்புறுதிப் பணிகளை முறைமைப்படுத்துதல்<br>31.அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரசுக்குச் சொந்தமான கம்பனிகளின் நிதி நிர்வாகம்<br>32. நீக்கப்பட்டுள்ளது.<br>33.(முடிவுறுத்துவதற்கு அல்லது வேறு நிறுவனங்களுடன் இணைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள விடயம் இல.52 இலிருந்து 59 வரையான நிறுவனங்களின் நடவடிக்கைகளை முடிவுறுத்ததல்)<br>34. கொழும்பு தாமரைக் கோபுரத்தை வர்த்தக மாதிரியாகவும் சுற்றுலா கேந்திர நிலையமொன்றாகவும் மேம்படுத்துதல்<br>35. பொறியியல் உசாத்துணைச் சேவைகள் மற்றும் நிர்மாணப் பணிகள்<br>36.ஐஐ ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்-பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்கான நடவடிக்கைகளும்<br>37.ஐஐ ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களையும் | | ஆம் இலக்க) கசினோ தொழில் (ஒழுங்குறுத்துகைச்) சட்டம்<br>• (2006 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க) கொடுப்பனவு முறைகள் பற்றிய மோசடிகள் சட்டம்<br>• (2019 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) கீழுழைப்பு செயற்பாட்டு தொழில்முயற்சிகள் அல்லது கீழுழைப்பு பயன்பாட்டு சொத்துக்கள் உயிர்ப்பித்தல்(அகற்றுதல்) சட்டம்<br>• (1959 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) பட்டயக் கணக்காளர் நிறுவனச் சட்டம்<br>• (2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) மூலோபாய அபிவிருத்திக் கருத்திட்டச் சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

| | | |
|---|---|---|
| கண்காணித்தல | | |

**03. தொழில்நுட்ப அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| **கடமைகளும் பணிகளும்** | **திணைக்களங்களும் நியதிச்சட்டநிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்** |
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட தொழில்நுட்பம் பற்றிய விடயத்துடனும் மற்றும் IIஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களுடனும் தொடர்பான விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயாரித்தலும், நடைமுறைப்படுத்தலும், தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள் சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ | 1. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை மற்றும் இணைந்த நிறுவனங்கள்<br>2. இலங்கை கணனி திடீர் பதிலளித்தல் ஒன்றியம்<br>3. நீக்கப்பட்டுள்ளது.<br>4. இலங்கை தரவளவு நிறுவனம்<br>5. இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் இணைந்த நிறுவனங்கள்<br>6. ரொபோ தொழில்நுட்பத்துக்கான அதிசிறப்பு நிலையம்<br>7. இலங்கை தரவுப் பாதுகாப்பு அதிகார சபை | • (2003 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சட்டம்<br>• (2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்கள் சட்டம்<br>• (1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க) இலங்கை தரவளவு நிறுவனச் சட்டம்<br>• (1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க) ஸ்ரீலங்கா தொலைத்தொடர்புகள் சட்டம்<br>• (2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க) தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

| | | |
|---|---|---|
| முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைப்புச் செய்தல்<br>4. புதிய தொழில்நுட்பத்தைப் பாவித்து அனைவருக்கும் தகவல் தொழில்நுட்ப வசதிகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.<br>5. உள்ளூர் அரச நிறுவனங்களில் தகவல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் அரசின் சேவை வழங்கல் உற்பத்தித்திறனையும் வினைத்திறனையும் அதிகரிப்பதற்காக தகவல் தொழில்நுட்ப வசதிகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான வசதிகளை வழங்குதலும் மேற்பார்வை செய்தலும்<br>6. தகவல் தொழில்நுட்பத்தின் வெற்றியை ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல்<br>7. சமூகத்தில் சகல மட்டங்களிலும் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்துவதற்கான உபாயங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் தனியார் துறையுடன் ஒன்றிணைந்து தகவல் தொழில்நுட்ப ஆரம்பக் கூட்டிணைப்பு மற்றும் வசதிகளை வழங்குதல்<br>8. சைபர் பாதுகாப்புக்குரிய | | |

| | | |
|---|---|---|
| சம்பவங்கள் தொடர்பாக முனைப்பான தலையீடு மற்றும் அதுபோன்ற சம்பவங்களைத் தவிர்த்தல்<br>9. டிஜிட்டல் தடயவியல் ஆராய்ச்சிக்கு தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்குதல்<br>10. தரங்களை விதித்தல் மற்றும் நிர்வாகம் தொடர்பான நடவடிக்கைகள்<br>11. அதிகரித்துவரும் போட்டிகரமான சந்தைகளில் பொது நன்மையைப் பாதுகாத்து தொலைத்தொடர்புத் தொழிலில் நிலைபேறான அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக தொலைத்தொடர்பு நடவடிக்கைகளை ஒழுங்குறுத்துதல்<br>12. டிஜிட்டல் தொழில்நுட்பத் தொழிலை விரிவுபடுத்தல் தொடர்பான நடவடிக்கைகள்<br>13. பசுமைத் தொழில்நுட்பக் கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக உரிய அமைச்சுக்களுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்<br>14. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்குரிய பணிகளும்<br>15. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களையும் கண்காணித்தல் | | |

| | | |
|---|---|---|
| | | |

**04. மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| **கடமைகளும் பணிகளும்** | **திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்** |
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட மகளிர், சிறுவர் அலுவலகள் மற்றும் சமூக வலுப்படுத்துகை பற்றிய விடயங்களுடனும் மற்றும் IIஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களுடனும் தொடர்பான விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயாரித்தலும், நடைமுறைப்படுத்தலும், தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>**3.** வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ | 1. மகளிர் தொடர்பான தேசிய குழு<br>2. இலங்கை மகளிர் பணியகம்<br>3. நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம்<br>4. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை<br>5. முன் சிறுவர் அபிவிருத்தி பற்றிய தேசிய செயலகம்<br>6. சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்<br>7. சௌபாக்கியா அபிவிருத்திப் பணியகம்<br>8. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்<br>9. கிராம அபிவிருத்தி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்<br>10.சமூகப் பாதுகாப்புச் சபை<br>11. வலதுகுறைந்த ஆட்களுக்கான தேசிய மன்றம்<br>12.வலதுகுறைந்த ஆட்களுக்கான தேசிய பொதுச் செயலகம்<br>13.சமூக சேவைகள் திணைக்களம்<br>14. வயது முதிர்ந்த ஆட்களுக்கான தேசிய மன்றமும் தேசிய வயது முதிர்ந்தோர் செயலகமும | • (2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க) வீட்டு வன்முறைகள் தவிர்ப்புச் சட்டம்<br>• (1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க)தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டம்<br>• (1941 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) சிறுவர் மகவேற்புக் கட்டளைச் சட்டம்<br>• (1939 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க) சிறுவர், இளம் ஆட்கள் கட்டளைச் சட்டம்<br>• திவிநெகும சட்டம் (2013 இல 01)<br>• தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகச் சட்டம் (1992 இல 41)<br>• சமூகப் பாதுகாப்புச் சட்டம் (1996 இல 17)<br>• வலதுகுறைந்தோர் சிறப்புரிமைகள் பாதுகாப்புச் சட்டம் (1996 இல 28)<br>• (1985 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க) வறுமை நிவாரணச் சட்டம்<br>• (1907 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க) தடுப்பு விடுதிக் கட்டளைச் சட்டம்<br>• (1939 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க) வறியோர் சட்ட கட்டளைச் சட்டம்<br>• (1841 ஆம் ஆண்டின் 4 ஆம் |

| | | |
|---|---|---|
| முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைப்புச் செய்தல்,<br>4. மகளிர் சாசனத்தைச் செயற்படுத்துதல்<br>5. அரசாங்க அலுவல்களின்போது தீர்மானங்களை எடுத்தலும் அரசியல் துறையினுள் பெண்களின் பங்கேற்பையும் பிரதிநிதித்துவத்தையும் அதிகரிப்பதற்காக உபாயமுறைகளைத் தயாரித்தலும் செயற்படுத்துதலும்<br>6. மோதல்களினாலும் வறுமையினாலும் விபத்துக்குள்ளான பெண்களை வலுப்படுத்தத் தேவையான நடவடிக்கை எடுத்தல்<br>7. மகளிர் மற்றும் சிறுவர் துன்புறுத்தலைத் தவிர்ப்பதற்கான சட்டங்களையும் கொள்கைகளையும் வலுப்படுத்துதலும் செயற்படுத்தலும்<br>8. பால்நிலை மற்றும் ஆண் பெண் எனச் சமூகரீதியில் வேறுபடுத்திக் கருதுவதைத் தடுப்பதற்காக தற்போதுள்ள சட்டங்களைத் திருத்தம்செய்து புதிய சட்டங்கள் மற்றும் கொள்கைகளை வகுத்தலும் செயற்படுத்துதலும்<br>9. மகளிர் அடிப்படையாகக்கொண்ட வீட்டு அலகினைப் பலப்படுத்துவதற்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தல் மற்றும் செயற்படுத்துதல் | | இலக்க) அலைந்துதிரிவோர் கட்டளைச்சட்டம்<br>• (2000ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க) முதியோர் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்<br>• (1992 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க) கட்புலனற்றோர் புனரமைப்பு நிதியச் சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமா ன விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

| | | |
|---|---|---|
| 10. மகளிர் மற்றும் சிறுவர் நடவடிக்கைகளுக்குரிய நீடுறுதியான அபிவிருத்தி அபிலாசைகளை நிறைவேற்றல்<br>11. ஆரம்பப் பாடசாலைகளுக்காக தேசியக் கொள்கையொன்றைத் தயாரித்துச் செயற்படுத்துதல்<br>12. உடல், உள ரீதியான ஆரோக்கியமுள்ள பிள்ளைகளை உருவாக்கும் நோக்குடன் முன் சிறுவர்பராய பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்தமைத்தல்<br>13. பாதுகாப்பற்ற நிலையிலுள்ள சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச நியமங்களுக்கு இயைபானவாறு நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும்<br>14. சிறுவர் பட்டயத்தை நடைமுறைப்படுத்துதல்<br>15. சிறுவர் பாதுகாப்பு நிலையத்தின் ஒழுங்குறுத்துகை<br>16. செவண சரண ஆதரிப்புப் பெற்றோர் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்<br>17. விசேட திறமைகளுடைய சிறுவர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்கான நிதி உதவியினை வழங்குதல்<br>18. சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்துதல்.<br>19. விசேட தேவையுடையவர்களின் தேவைகளை இனங்காணல் மற்றும் அத்தேவைகளை | | |

| | | |
|---|---|---|
| நிறைவேற்றுதல்<br>20.மக்கள் உதவித்தொகை திட்டங்களை மீளாய்வு செய்தலும் மீள்ஏற்பாடு செய்தலும் தகுந்த புதிய சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தலும்<br>21. சயரோகம், சிறுநீரக நோய், தொழுநோய், புற்றுநோய், தெலிசீமியா போன்ற நோய்களால் பீடிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களில் தங்கிவாழ்வோருக்கும் உதவித் தொகைகளை வழங்குதல்<br>22.குடும்ப ஆலோசனை சேவைகளை நடைமுறைப்படுத்துதல்<br>23.விசேட தேவையுடைய நபர்கள் தொடர்பில் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படும் சமவாயங்களுக்குரிய அலுவல்கள்<br>24.விசேட தேவையுடைய ஆட்களுக்கு வாழ்க்கைத்தொழில் பயிற்சியளித்தலும், வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதற்காக உரிய நிறுவனங்களுடன் இணைந்து தேவையான உபாயமுறைகளைத் திட்டமிடுதலும்<br>25.விசேட தேவையுடைய நபர்கள் பிரதான மக்கள் சமூகத்துடன் சேர்ந்து செயற்படக்கூடியதாக தேவையான கொள்கைரீதியான மாற்றங்களைத் தகுந்த முறையில் மேற்கொள்ளவும் அவற்றைச் செயற்படுத்தத் தேவையான நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தலும்<br>26.விசேட தேவையுடைய ஆட்களுக்கான சமூகக் காப்புறுதித் திட்டங்களைச் செயற்படுத்துதல் | | |

| | | |
|---|---|---|
| 27.வயதுமுதிர்ந்த ஆட்களின் நலக் கவனிப்பும் சமூக அபிவிருத்திப் பணிகளில் முதியோரின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்தலும் சிரேட்ட பிரசைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தலும்<br>28.II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்குரிய பணிகளும்<br>29.II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**05. துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானச்சேவைகள் அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| **கடமைகளும் பணிகளும்** | **திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்** |
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானச் சேவைகள் தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் | 1. இலங்கை துறைமுக அதிகாரசபையும் அதன் துணைக் கம்பனிகளும் இணைக் கம்பனிகளும்<br>2. வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்<br>3. வாணிப கப்பற்றுறைச் செயலகம்<br>4. சிவில் விமான சேவைகள் அதிகாரசபை<br>5. வரையறுக்கப்பட்ட விமானநிலைய, விமானசேவைகள் (ஸ்ரீலங்கா) கம்பனி<br>6. வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் எயார் லைன் மற்றும் அதனோடிணைந்த | • (1971ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க) இலங்கை கப்பற்றொழிற் கூட்டுத்தாபனச் சட்டம்<br>• (1972ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க) கப்பற்றொழில் முகவர்களுக்கு உரிமமளித்தல் சட்டம்<br>• (1865 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க) கப்பல் உதவியாளர்கள் கட்டளைச்சட்டம்<br>• (1971ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க) வணிகக் கப்பற்றொழிற் சட்டம்<br>• (1979ஆண்டின் 51ஆம் |

| | | |
|---|---|---|
| வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைத்தல்<br>4. வர்த்தக துறைமுகங்களின் அபிவிருத்தியும் முகாமையும் மற்றும் அவற்றின் முதலீட்டுச் சந்தர்ப்பங்களை விரிவுபடுத்துதலும்<br>5. கொள்கலன் முனையங்களை அபிவிருத்தி செய்தல்<br>6. கப்பற்படையாட்சித்துறைக்குச் சொந்தமானவை தவிர்ந்த ஏனைய துறைமுகங்களினதும் வெளிச்சவீடுகள் கலங்கரை விளக்கங்களினதும் எண்ணெய் தாங்கி அமைவுகளினதும் உபகரணங்களினதும் அபிவிருத்தியும் நிருவாகமும்<br>7. கப்பற்சேவை வழங்குநர்கள், பாவனையாளர்கள் ஆகியோருக்கிடையிலான பிணக்குகளைத் தீர்த்தல்<br>8. கப்பற்சேவைகளுக்கான போட்டி விதிகளைத் விதித்தல்<br>9. கப்பற்சேவை வழங்குநர்கள், பாவனையாளர்கள் ஆகியோருக்கிடையில் ஆலோசனைகளுடனான கூட்டிணைப்பை உறுதிப்படுத்துதலும் ஆதரவளித்தலும்<br>10. கப்பற்சேதங்களின் பெறுகையும் சமுத்திரச் சிதைவுப்பொருட்களின் | கம்பனிகளும் | இலக்க) இலங்கை துறைமுக அதிகாரசபைச் சட்டம்<br>• (1908 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க) துறைமேடை துப்புரவாக்குதல் மற்றும் ஆக்கவுரிமைச் சிட்டைக் கட்டளைச் சட்டம்<br>• (1900 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) படகுகள் கட்டளைச் சட்டம்<br>• 2002ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க) இலங்கை சிவில் விமானசேவைகள் அதிகாரசபைச் சட்டம்<br>• (2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) சிவில் விமானச் சேவைகள் சட்டம்<br>• (1982 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க) வான்செலவு (விசேட ஏற்பாடுகள்) சட்டம்<br>• (2018 ஆம்ஆண்டின் 29ஆம் இலக்க) விமானப் போக்குவரத்துச் சட்டம்<br>• (1950 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) விமானத் தரிப்பிடம் மற்றும் சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப் பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும் |

| | | |
|---|---|---|
| மீட்புகளும்<br>11. கப்பற் கட்டணங்களும் கப்பற்சேவை அலுவல்களும்<br>12. கரையோரம் சார்ந்த பயணிகள் போக்குவரத்து<br>13. கப்பல்களின் உரிமைகள், கருமமாற்றல், கப்பல் முகாமைத்துவம், கப்பல் தரக முகாமைத்துவம் மற்றும் முகவர் சேவைகள்.<br>14. சுங்க முகவராண்மைகள் மற்றும் ஒட்டுமொத்தக் கப்பல் பண்டங்களை ஏற்றிச் செல்லல் தொடர்பான தீர்வுகள்<br>15. சர்வதேச மற்றும் உள்ளூர் விமான நிலையங்களின் அபிவிருத்தியும், ஒழுங்குறுத்துகை நடவடிக்கைகளும்<br>16. விமானநிலையங்கள்மூலம் வழங்கப்படும் சேவைகளின் முன்னேற்றம், கண்டணங்கள் மற்றும் தரங்கள்பற்றிய ஒழுங்குறுத்துகை.<br>17. சர்வதேச விமானப் பயணங்களை விரிவுபடுத்துவதற்காக ஏனைய நாடுகளுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ளல் உள்ளிட்ட ஏனைய அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.<br>18. இலங்கை விமான நிலையங்கள் வெளிநாடுகளால் பாவிக்கப்படுவதற்குரிய மேம்படுத்துகையும் ஒழுங்குறுத்துகையும்.<br>19. விமானங்கள்மூலம் பொருட்களை ஏற்றுமதி செய்வதை விரிவுபடுத்துதல்<br>20. உள்ளூர் விமானப் பயணங்களை மேம்படுத்துதல்<br>21. தனியார் விமானப் பயணச் சேவைகளின் ஒழுங்குறுத்துகை.<br>22. விமானங்களைப் பதிவுசெய்தல்.<br>23. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள | | |

| | | |
|---|---|---|
| நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்குரிய பணிகளும்<br>24. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களையும் கண்காணித்தல் | | |

**06. முதலீட்டு மேம்பாடு அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| **கடமைகளும் பணிகளும்** | **திணைக்களங்களும் நியதிச்சட்டநிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்** |
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையவும் தாபிக்கப்பட்ட முதலீட்டு மேம்பாடு விடயத்துடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள் சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு | 1. ரெக்னோ பாக் டெவலப்மென்ட் கம்பனி பிறைவேட் லிமிட்டெட்<br>2. தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள்<br>3. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை<br>4. இலங்கை முதலீட்டுச் சபை<br>5. கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு<br>6. வரையறுக்கப்பட்ட ஹிங்குரான சீனித் தொழிற்சாலைக் கம்பனி<br>7. வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி<br>8. கந்தளாய் சீனிக் கம்பனி<br>9. கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் | • (1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க) இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்<br>• (1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் ((முதலீட்டுச்சபைச் சட்டம்)<br>• (2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக் குழுச் சட்டம்<br>• (1981 ஆம் ஆண்டின் 75ஆம் இலக்க) கரும்பு ஆராய்ச்சி நிறுவனச் சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

| | | |
|---|---|---|
| நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைத்தல்<br>4. இலங்கை பிராந்திய வர்த்தக மற்றும் முதலீடு ஒத்துழைப்பை உயர்த்தும் நோக்கிலான கொள்கைகள், உபாயமுறைகள் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் என்பவற்றை வகுத்தமைத்தல்<br>5. இலங்கையினுள் பொருளாதார இயலுமையை மேம்படுத்துவதன்மூலம் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் தனியார்துறையின் முதலீடுகளை ஊக்குவித்தல்<br>6. பொருளாதார அபிவிருத்தி வலயங்களை ஊக்குவித்தலும் ஒழுங்குறுத்தலும் கண்காணித்தலும்<br>7. தொழில்நுட்பப் பூங்காக்களை ஏற்படுத்துதல்<br>8. டிஜிட்டல் தொழில்நுட்பத் தொழிலை விரிவுபடுத்தல் தொடர்பான நடவடிக்கைகள்<br>9. தேசிய நன்மை மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை நோக்காகக் கொண்டு விசேட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஏனைய வசதிகளுடன் கூடிய சர்வதேச தொழில் முயற்சிகள் மற்றும் சேவைகள் வழங்குவதற்கான கேந்திர நிலையமாக கொழும்பு துறைமுக நகர் விசேட பொருளாதார வலயத்தை அபிவிருத்தி செய்தல் | | |

| | | |
|---|---|---|
| 10. கரும்பு பயிர்செய்கைக்குத் தேவையான நீரின் சிக்கன பயன்பாடு தொடர்பாக தொழில்நுட்பம் சார்ந்த முறைமையினை நடைமுறைப்படுத்தல்<br>11. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்குரிய பணிகளும்<br>**12.** II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களையும் கண்காணித்தல் | | |

**07. பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்**

| **நிரல் I** | **நிரல் II** | **நிரல் III** |
|---|---|---|
| **கடமைகளும் பணிகளும்** | **திணைக்களங்களும் நியதிச்சட்டநிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்** |
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட பொதுநிர்வாக,உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தமைத்தலும் செயற்படுத்ததலும், தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>3. வீண்விரயம் மற்றும் ஊழலை | 1. ஓய்வூதியத் திணைக்களம்<br>2. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம்<br>3. டிஸ்டன்ஸ் லேர்னிங் சென்டர் லிமிட்டெட்<br>4. அரசகரும மொழிகள் திணைக்களம்<br>5. அரசகரும மொழிகள் ஆணைக்குழு<br>6. மனிதவள அபிவிருத்திக்கான இலங்கை தேசிய சபை<br>7. தேசிய மொழிக் கல்விகள் மற்றும் பயிற்சிகள் நிறுவனம்<br>8. அரச சேவை ஓய்வூதியர்களின் நமபிக்கைப்பொறுப்பு நிதியம்<br>9. உள்ளூராட்சிச் சேவைகள் ஓய்வூதியம் நிதியம்<br>10. உள்ளூராட்சி விதவைகள் மற்றும் அனாதைச்சிறார் ஓய்வூதிய நிதியம்<br>11. உள்ளூராட்சி விதவை தபுதார்கள் மற்றும் அனாதைச்சிறார் ஓய்வூதிய நிதியம்<br>12. சகல மாவட்டச் | • (1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) தபுதாரர்கள், அனாதைகள் ஓய்வூதியச் சட்டம்<br>• (1898 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) விதவைகள், அனாதைகள் ஓய்வூதியக் கட்டளைச் சட்டம்<br>• (1998ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க) விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்ட முறைகள் (ஆயுதந்தாங்கிய படைகள்) சட்டம்<br>• (1970ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) தபுதாரர்கள், அனாதைகள் ஓய்வூதியத் திட்ட முறைகள் (ஆயுதந்தாங்கிய படைகள்) சட்டம்<br>• (1999 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க) அரச சேவையின் ஓய்வூதியம் |

| | | |
|---|---|---|
| ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைத்தல்<br>4. அரச சேவைகள் தொடர்பாக தற்போதுள்ள சட்டவிதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீளாய்வு செய்து இலகுபடுத்துதல்<br>5. அரச சேவையிலுள்ள பிணக்குகளைத் தீர்ப்பதற்கான செயற்பாடொன்றை அறிமுகப்படுத்துதல்<br>6. கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளின் நிர்வாகமும் ஆளணி முகாமைத்துவமும்<br><br>இலங்கை நிருவாக சேவை<br>இலங்கை கணக்காளர் சேவை<br>இலங்கை திட்டமிடல் சேவை<br>இலங்கை பொறியியல் சேவை<br>இலங்கை விஞ்ஞான சேவை<br>இலங்கை கட்டிடக்கலைஞர் சேவை<br>இலங்கை தொழினுட்ப சேவை<br><br>7. இணைந்த சேவைகளின் நிருவாகம்<br>8. தாபனவிதிக்கோவையின் கீழான பணிகள்<br>9. அரசாங்க சேவைப் பயிற்சி<br>10. ஓய்வூதியப் பிரமாணக்குறிப்பை செயற்படுத்தல்<br>11. பாராளுமன்றத்திற்கும் பாராளுமன்ற உறுப்பினர்களது அலுவல்களுக்கும் உரியதாக அரசாங்கத்தினால் ஆற்றப்படவேண்டிய பணிகள்<br>12. பாராளுமன்ற உறுப்பினர்களின் பணியாட்தொகுதியினர் தொடர்பான தாபன அலுவல்கள்<br>13. மாவட்ட மற்றும் பிரதேச நிர்வாக அலுவல்கள்<br>14. அரச விழாக்களை ஏற்பாடு செய்தல்<br>15. மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களின்மூலம் | செயலகங்களும் பிரதேச செயலகங்களும்<br>13. பதிவாளர் நாயகத் திணைக்களம்<br>14. உள்ளூராட்சி பற்றிய இலங்கை நிறுவனம்<br>15. தேசிய கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்<br>16. பல்துறை அபிவிருத்தி செயலாற்றுகை திணைக்களம் | பெறுவோர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டம்<br>• (1942 ஆம் ஆண்டின 18 ஆம் இலக்க) பகிரங்க சேவை சேமலாப நிதிய கட்டளைச் சட்டம்<br>• ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பு<br>• (1953 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க) பாடசாலை ஆசிரியர்களுக்கான ஓய்வூதியச் சட்டம்.<br>• (1993 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) மாகாண சபைகள் ஓய்வூதியச் சட்டம்<br>• (1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க) உள்ளூராட்சி சேவைகள் சட்டம்<br>• (1910 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) அரச மற்றும் நீதிச்சேவை உத்தியோகத்தர்களை இளைப்பாறச் செய்வதற்கான கட்டளைச் சட்டம்<br>• இராணுவ ஓய்வூதிய மற்றும் பணிக்கொடை பிரமாணக் கோவை<br>• விமானப்படை ஓய்வூதிய மற்றும் பணிக்கொடை பிரமாணக் கோவை<br>• கடற்படை ஓய்வூதியப் பணிக்கொடை மற்றும் பிரமாணக் கோவை.<br>• (1961 ஆம் ஆண்டின் 70 ஆம் இலக்க) கட்டாய பகிரங்க சேவைச் சட்டம்<br>• (1982ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க) இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகச் சட்டம்<br>• (1969 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) அரசாங்க விடுதிகள் (உடைமையை மீளப்பெறுதல்) சட்டம்<br>• (1957ஆம் ஆண்டின் |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்படும் மக்கள்மைப்படுத்தப்பட்ட சேவைகளை வலுவூட்டுதல்<br><br>16. பிறப்பு, விவாகம் மற்றும் இறப்பு பதிவுசெய்வதற்குரிய அலுவல்கள்<br>17. மாகாண சபைகளுக்குரிய நடவடிக்கைகளை ஒழுங்குறுத்துதல்<br>18. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களது நிருவாகம் தொடர்பான அனைத்துப் பிரிவுகளினதும் ஆராய்ச்சிகளை நடாத்துதல்<br>19. மகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் குறைந்த வசதிகளுடன்கூடிய துறைகளை / பிரிவுகளை இனங்கண்டு அதற்குரிய வசதிகளை வழங்குவுதற்காக விசேட் கருத்திட்டங்களைத் திட்டமிட்டுச் செயற்படுத்துதல்<br>20. மாகாணசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்குப் பயிற்சியளித்தல்<br>21. உள்ளூராட்சி நிறுவனங்களுடன் தொடர்பான அரசாங்கப் பணிகள்<br>22. பொது வசதிகள் அலுவல்கள் தொடர்பாக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கடன் வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்<br>23. உள்ளூராட்சி சபை உறுப்பினர்களையும் உத்தியோகத்தர்களையும் ஊழியர்களையும் பயிற்றுவித்தல்<br>24. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும்<br>25. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | 37ஆம் இலக்க) பரிசளிப்புப் போட்டிகள் சட்டம்<br>• (1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) அரசகரும மொழிகள் சட்டம்<br>• (1991 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டம்<br>• (1997 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) தேசிய மனிதவள அபிவிருத்திக்கான இலங்கை தேசிய சபைச் சட்டம்.<br>• (2007 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க) தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனச் சட்டம்<br>• (1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க) அதிகாரமளித்தல் (பிரதேச செயலாளர்கள்) சட்டம்<br>• (1971ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க) விடுமுறைகள் சட்டம்<br>• (1941 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) பிரதான விதானையார் பதவியை மாற்றும் சட்டம்<br>• (1964 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க) பிரதான விதானையார் பதவியை மாற்றும் சட்டம்<br>• (1977 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க) கிராம சேவகர் பதவிப் பெயர்களை திருத்துதல் சட்டம்<br>• (1993 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க) கிராம சேவகர் உத்தியோகத்தர் பதவிப் பெயரை மாற்றும் சட்டம்<br>• (1951 ஆம் ஆண்டடின் 17 ஆம் இலக்க) பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவுச் சட்டம்<br>• (1952 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க) மலைநாட்டு |

| | | |
|---|---|---|
| | | விவாக, மண நீக்கற் சட்டம்<br>• (1951 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க) முஸ்லிம் விவாக, மண நீக்கற் சட்டம்<br>• (1907 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) நொத்தாரிசுகள் கட்டளைச் சட்டம்<br>• (1927 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டம்<br>• (1907 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) சாதாரண விவாகப் பதிவு கட்டளைச் சட்டம்<br>• (1917 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க) நம்பிக்கைபொறுப்புக் கட்டளைச் சட்டம்<br>• (2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க) காணிகள் (உடமை வழங்குதல் வரையறைச்) சட்டம்<br>• (2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) முத்திரைச் சட்டம்<br>• (2005 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) தண்டப்பணம் அதிகரிக்கும் சட்டம்<br>• (2017 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க) இரத்துச்செய்ய முடியாத நன்கொடை உரித்துப்பத்திரங்களை நன்றியின்மை காரணமாக இரத்துச்செய்தல் சட்டம்<br>• (1902 ஆம் அண்டின் 4 ஆம் இலக்க) அட்டோர்னி தத்துவப் பத்திரம் பதிவுசெய்தலுக்கான கட்டளைச் சட்டம்<br>• (1941 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) சிறுவர் மகவேற்பக் கட்டளைச் சட்டம்<br>• (2016 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க) இறப்புப் பதிவுசெய்தல் தற்காலிகச் சட்டம்<br>• (2010 ஆம் ஆண்டின் 19 |

| | | |
|---|---|---|
| | | ஆம் இலக்க) இறப்புப் பதிவுசெய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்<br>• உள்ளூராட்சி நிறுவன வாக்கெடுப்புக் கட்டளைச் சட்டம் (262 அத்தியாயம்)<br>• (1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க)உள்ளூராட்சி நிறுவன வாக்கெடுப்புக் கட்டளைச் சட்டம்<br>• (1999 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) உள்ளூராட்சி பற்றிய இலங்கை நிறுவனச் சட்டம்<br>• மாநகரசபைக் கட்டளைச் சட்டம் (52 ஆம் அத்தியாயம்)<br>• (1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க) பிரதேச சபைகள் சட்டம்<br>• (255 அத்தியாயம்) நகர சபைக் கட்டளைச் சட்டம்<br>• (1987ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க) மாகாண சபைகள் சட்டம்<br>• (1988ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க) மாகாண சபைகள் (சம்பளங்கள், படிகள் கொடுப்பனவு) சட்டம்<br>• (1916 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க) தேசியக் கடன் மற்றும் அபிவிருத்தி கட்டளைச் சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

**08. கடற்றொழில் அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| | **திணைக்களங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட** |

| கடமைகளும் பணிகளும் | நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | வேண்டிய சட்டங்கள் |
|---|---|---|
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட கடற்றொழில் பற்றிய விடயத்துடனும் மற்றும் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களுடனும் தொடர்பான விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயாரித்தலும், நடைமுறைப்படுத்தலும், தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைப்புச் செய்தல்,<br>4. கடற்றொழில் துறையில் ஆராய்ச்சி நடவடிக்கைகளை விஸ்தரிப்பதன்மூலம் மீன்வளர்ப்பினை வியாபித்தல்<br>5. உயிருள்ள, உயிரற்ற தேசிய நீரக வளமூலங்களின் அபிவிருத்தி<br>6. நவீன விஞ்ஞான திறமுறைகளின் ஊடாக கடல் வளங்கள்சார் பொருளாதார அபிவிருத்திக்குரிய ஆராய்ச்சிப் பணிகளை விஸ்தரிப்பதற்குரிய வசதிகளை ஏற்படுத்துதல்<br>7. அரசுடைமையான மீன்பிடிப் படகுகளின் முகாமையும் | 1. கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களம்<br>2. தேசிய நீரக வளமூலங்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம்<br>3. தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை<br>4. இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்<br>5. இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்<br>6. வரையறுக்கப்பட்ட சீ-நோர் மன்றம் | • (1996ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க) கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் சட்டம்<br>• (1990ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க) மீனவர் ஓய்வூதிய மற்றும் சமூகப் பாதுகாப்பு நன்மைகள் திட்டச் சட்டம்<br>• (1981ஆம் ஆண்டின் 54ஆம் இலக்க) தேசிய நீரக வளமூலங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மைச் சட்டம்<br>• (1998ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க) இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப் பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

| | | |
|---|---|---|
| செயலாட்சியும்<br>8. நுகர்வோருக்கும் உற்பத்தியாளர்களுக்கும் நன்மை ஏற்படும் வகையில் மீன் உற்பத்தி மற்றும விற்பனையை விரிவாக்குதல்<br>9. சர்வதேச கடல் பிரதேசங்களில் கடற்றொழிலை விரிவாக்குவதற்காக தேசிய கம்பனிகளுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.<br>10.இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்தலை நிறத்துதல்<br>11. உள்ளூர் ரின்மீன் கைத்தொழிலை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்<br>12. கடற்றொழில் கைத்தொழில சாரந்த தொழில்முயறசிகளை மேம்படுத்துவதற்காக சிறிய மற்றும் மத்தியதர தொழில்முயற்சியாளர்களை ஊகக்குவித்தல்<br>13. ஏற்றுமதிச் சந்தையை நோக்காகக்கொண்ட அலங்கார மீன்கள் கைத்தொழிலை ஏற்படுத்துவதற்காகத் தேவையான வசதிகளை வழங்குதல்.<br>14. மீனவ சமூகத்தின் நலன்புரி நடவடிக்கைகளை விரிவுபடுத்துதல் மற்றும் பயனுறுதியான வங்கி மற்றும் காப்புறுதி முறையொன்றை அறிமுகப்படுத்துதல்<br>15. சமுத்திர பல்கலைக்கழகத்துடன் இணைந்து கடற்றொழில் நடவடிக்கைகள் பற்றிய தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவப் பஙிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல்<br>16. கடல்நீர், உவர்நீர் (ஆற்று) மற்றும் நன்நீர் மீன்பிடித் தொழிலின் அபிவிருத்தியும் முகாமையும்<br>17. பலநாள் கடற்றொழில் படகுகளுக்காகக் கடல்நீரை உபயோகித்து குளிரூட்டித் தொகுதியினை விருத்தி செய்தல் மற்றும் சூரிய வலுசக்தியைப் பாவிப்பதற்கு | | |

| | | |
|---|---|---|
| ஊக்குவித்தல்.<br>18. கடற்றொழில் துறைமுகங்கள், நங்கூரத் தளங்களின் நிறுவுகை, பராமரிப்பு மற்றும் முகாமை<br>19. கடற்றொழிலுக்கு அவசியமான ஐஸ்பொறித் தொகுதிகள், குளிர் அறைகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவுதலும் தரமான பராமரிப்பு நடவடிக்கைகளும்<br>20. மீன் மற்றும் மீன்சார்ந்த உற்பத்திகளின் வியாபாரமும் விநியோகமும்<br>21. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்குரிய பணிகளும்<br>22. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**09. கல்வி அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| **கடமைகளும் பணிகளும்** | **திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்** |
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட கல்வி விடயத்துடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் | 1. பரீட்சைத் திணைக்களம்<br>2. கல்வி வெளியீட்டுத் திணைக்களம்<br>3. தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை<br>4. தேசிய கல்வியியற் கல்லூரிகள்<br>5. ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள்<br>6. இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழு<br>7. இலங்கை தேசிய நூல் அபிவிருத்திச் சபை | • (1968ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க) பகிரங்கப் பரீட்சைகள் சட்டம்<br>• (1960ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க) உதவிபெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் சட்டம்<br>• (1961 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க) உதவிபெறும் பாடாலைகளும் பயிற்சிக் கல்லூரிகளும்<br>• (1981 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க) உதவிபெறும் |

| | | |
|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப் படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைத்தல்<br>4. முன்சிறுவர் பராய ஆரம்ப, இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளுக்கிடையில் சிறந்த தொடர்புகள் ஏற்படும் வகையில் கல்வி அபிவிருத்திக்குரியதான துறைசார் கொள்கைகளைப் பகுப்பாய்வு செய்தலும் வகுத்தமைத்தலும்<br>5. உலக போட்டிகர நிலைக்கு தன்னம்பிக்கையுடனும் வெற்றிநிலை பற்றிய நம்பிக்கையுடனும் பிரவேசிக்கக்கூடிய வகையில் தேசிய கல்வி முறையொன்றை உருவாக்குதல்<br>6. முன்பள்ளி கல்வி முதல் உயர்கல்வியைப் பூர்த்தி செய்யும் வரையில் தெளிவான வழிகாட்டல் | 8. அரச அச்சகக் கூட்டுத்தாபனம்<br>9. கல்விப் பணிப்பாளர் அலுவலகம்<br>10. தேசியக் கல்வி ஆணைக்குழு<br>11. தேசியக் கல்வி நிறுவனம்<br>12. பிரிவெனா கல்விச் சபை<br>13. தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனம் மற்றும் அதனோடிணைந்த நிறுவனங்களும்<br>14. தொழில்துறை, தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்<br>15. தேசிய கடற்றொழில் மற்றும் கடல்துறைசார் பொறியியல் நிறுவனம் சமுத்திரம்சார் பல்கலைக்கழகம்)<br>16. இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை<br>17. தேசிய பயிலுநர், கைத்தொழிற் பயிற்சியளித்தல் அதிகாரசபை<br>18. இலங்கை - ஜேர்மனி தொழினுட்பப் பயிற்சி நிறுவகம்<br>19. தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்<br>20. தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவகம்<br>21. இலங்கை புதிய புத்தாக்குநர் ஆணைக்குழு<br>22. இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்<br>23. இலங்கை தேசிய ஆராய்ச்சி மன்றம்<br>24. மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத் தொழிற்கல்வி ஆணைக்குழு<br>25. தேசிய விஞ்ஞான மன்றம்<br>26. கோள்மண்டலக் காட்சிக்கூடம் | பாடாலைகளும் பயிற்சிக் கல்லூரிகளும் (விவேட ஏற்பாடுகள்) (திருத்தம்)<br>• (1988 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க) தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபைச் சட்டம்<br>• (1993ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க) பாடசாலை அபிவிருத்திச் சபைகள் சட்டம்<br>• (1999ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க) யுனெஸ்கோ புலமைப் பரிசில் நிதியச் சட்டம்<br>• (1968ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க) அரச அச்சகக் கூட்டுத்தாபனம்<br>• (1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) கல்விக் கட்டளைச் சட்டம்)<br>• (1986ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க) கல்லூரி கல்விச் சட்டம்<br>• (1960ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க) உதவிபெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் சட்டம்<br>• (1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) தேசியக் கல்வி ஆணைக்குழுக்கள் சட்டம்<br>• (1985ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க) தேசிய கல்வி நிறுவகச் சட்டம்<br>• (1979 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க) பிரிவெனாக்கள் கல்வி சட்டம்<br>• (2008 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) தொழில், தொழில்நுட்ப பல்கலைக்கழகச் சட்டம்<br>• (2014 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) இலங்கை சமுத்திர பல்கலைக்கழச் சட்டம் |

| | | |
|---|---|---|
| திட்டமொன்றை தயாரிப்பதற்கு கொள்கை ரீதியான வழிகாட்டல்களை செய்தல்.<br><br>7.ஒவ்வொரு பிள்ளைக்கும் கல்வி கற்பதற்கான உரிமையை உறுதிப்படுத்துதல்<br>8. விடய வெளிவாரி செயற்பாடுகள் பாடசாலைகளினுள் பிரசித்தப்படுத்துதல்<br>9. தேசியப் பாடசாலைகளுக்கான மானிட மற்றும் பௌதீக வளங்களை வழங்குதல்<br>10. தேசியக் கல்வி கொள்கைக்கு அமைவாக சர்வதேச பாடசாலைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் ஒழுங்குறுத்துகை<br>11. கல்வித்தரம், மாணவர் ஒழுக்கம், பண்பாடுகள் என்பவற்றை செவ்வனே முன்னெடுத்தலுக்கான கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்<br>12. விசேட தேவைப்பாடுகள் உள்ள மாணவர்களுக்கான கல்வி வாய்ப்புகளை உறுதிப்படுத்தத் தேவையான நடவடிக்கை எடுத்தல்<br>13.தேசிய மற்றும் இணைந்த மொழிக் கல்வியை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்<br>14.பௌத்த மற்றும் பாளி கற்கைப் பணிகளை ஊக்குவித்தலும் மத ரீதியான கல்வியின் நோக்கங்கள் பூர்த்தியாகும் வகையில் பிரிவெனா கல்வியை உயர்த்துதலும்<br>15. இலங்கை கல்வி நிருவாக சேவை, அதிபர் சேவை | 27. நவீன தொழினுட்பவியலுக்கான ஆதர் சி. கிளார்க் நிலையம்<br>28. தேசிய புத்தாக்க முகவராண்மை<br>29. வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவித்தி நிதியம்<br>30. இலங்கை புத்தாக்குநர்பற்றிய நிதியம்<br>31. தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு<br>32. ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியூட் ஒவ் நெனோ டெக்னொலோஜி பிறைவேட் லிமிட்டெட்<br>33. ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியூட் ஒவ் பயோடெக்னொலோஜி (பிறைவேட்) லிமிட்டெட்<br>34. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு<br>35. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழுள்ள சகல பல்கலைக் கழகங்களும் சகல பட்டப்பின்படிப்பு நிறுவனங்களும் ஏனைய நிறுவனங்களும்<br>36. புத்த சிராவக்க பிக்குகள் பல்கலைக்கழகம்<br>37. பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம்<br>38. இலங்கை உயர் | • (1976 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) தேசிய வர்த்தக முகாமைத்துவச் சட்டம்<br>• (1995ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க) இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபைச் சட்டம்<br>• (2017 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க)இலங்கை ஜெர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனச் சட்டம்<br>• (2019 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க) தேசிய புத்தாக்குநர் முகவர் சட்டம்<br>• (1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க) அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் அபிவிருத்திச் சட்டம்<br>• (2016 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) இலங்கை தேசிய ஆராய்ச்சிச் சபைச் சட்டம்<br>• (1979ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க) இலங்கை புத்தாக்குநர் ஊக்குவிப்புச் சட்டம்<br>• (1998 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க) இலங்கை கைத்தொழில் கல்வி நிறுவகச் சட்டம்<br>• (1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க) அரச தொழில்நுட்பக் கூட்டுத்தாபனச் சட்டம்<br>• (1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க) மூன்றாம் கல்வி, தொழில்கல்வி சட்டம்<br>• (1981ஆம் ஆண்டின் 55ஆம் இலக்கம்) இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகச் சட்டம்<br>• (1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க) பல்கலைக்கழகச் சட்டம்<br>• (1996ஆம் ஆண்டின் 26ஆம் |

| | | |
|---|---|---|
| மற்றும் ஆசிரியர் சேவையின் நிருவாகமும் ஏனைய கல்விச் சேவைகளின் ஆளணி முகாமைத்துவ அலுவல்களும<br>16.பாடசாலை அபிவிருத்திச் சபையின் நிருவாகம்<br>17.பாடசாலை நூலகத்தை ஊக்குவித்தலும் அபிவிருத்தி செய்தலும்<br>18. பாடசாலைப் புத்தகங்கள், சீருடைகள், ஏனைய தேவைகள் மற்றும் வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதலும் வழிநடத்தலும்<br>19. சகல பாடசாலைகளிலும் சுகாதாரப் பாதுகாப்புத் தொடர்பான நடவடிக்கைகள், சிறுவர் நட்பு வகுப்பறைகள், ஆசிரியர்களின் வதிவிட மற்றும் ஓய்வறைகள் தொடர்டபான வசதிகள் உட்பட சகல பௌதீக வசதிகளை மேம்படுத்துதல்<br>20. கல்வி மற்றும் பயிற்றுவிக்கும் செயற்பாடுகளுக்காக நவீன தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி<br>21. தொழில்கல்வி மீதான அக்கறையை அதிகரித்தல் மற்றும் அதற்கான மூலோபாயங்களை வகுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்<br>22. கல்வித் தகைமைகளை கருத்திற்கொள்ளாது தொழில் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்குச் சந்தரப்பம் வழங்குதல்<br>23. உள்ளூர் மற்றும் வெளிநாட்டு | தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் | இலக்க) புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழகச் சட்டம்<br>• (1981ஆம் ஆண்டின் 74ஆம் இலக்க) இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகச் சட்டம்<br>• (1995ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க) இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்விச் சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

| | | |
|---|---|---|
| தொழிற்சந்தைக்கு ஏற்ற ஊழியர் படையினை உருவாக்குவதற்காக தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பவியல் கல்வியை நவீனமயப்படுத்துதல்<br>24. பாடவிதானங்களை நவீனமயப்படுத்தி "One TVET" எண்ணக்கருவின் கீழ் அந்நிறுவனங்களை வலையமைப்புச் செய்து தொழில்நுட்பப் பட்டப்படிப்பு நிறுவனங்களாக மாற்றுதல்<br>25. பாடசாலைக் கல்வியை முடித்தபின் பல்கலைக்கழக கல்விக்காகத் தகைமைபெறாத மாணவர்களிற்கு தொழிற்கல்வி வாய்ப்புகளை விரிவாக்கக்கூடியவாறான கொள்கைகளைத் தயாரித்தலும் வசதிகளை அளித்தலும்<br>26. பயிலுநர் பயிற்சி வாய்ப்புகளை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்<br>27. தற்போதுள்ள தேசிய தொழல் தகைமைகள் (NVQ) மட்டத்தை மட்டம் 7 லிருந்து 10 வரை அதிகரிக்கச் செய்தல் மற்றும் அதற்கமைய இலங்கை தகைமை சட்டகத்தை (SLQF) மறுசீரமைத்தல்.<br>28. தொழிற்கல்வி மற்றும் தொழில்சார் துறையை ஒன்றிணைத்து தகவல் தொழில்நுட்ப ஆங்கில மற்றும் ஏனைய மொழி அறிவுகளை உள்ளடக்கி தொழிற்கல்வி பாடவிதானத்தை சீரமைத்தல்<br>29. இடம்பெயர் தொழில்நுட்ப கல்விச் சேவைகள் மூலம் தொழில் கல்விக்கான | | |

| | | |
|---|---|---|
| வாய்ப்புகளை அதிகரித்தல்<br>30. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புச்சந்தைகளை இலக்காகக்கொண்டு தொழில்கல்வியை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்<br>31. வேலைவாய்ப்புச் சந்தர்ப்பங்களுக்குத் தேவையான பட்டப்படிப்பு மட்டத்திலான உயர்கல்வி நிறுவனங்களாக நகர பல்கலைககழகங்களை ஆரம்பிப்தற்கு நடவடிக்கை எடுத்தல்<br>32. சர்வதேச ஆராய்ச்சி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு வசதிகளை வழங்குதல்<br>33. புத்தாக்க மற்றும் ஆராய்ச்சி மூலமான தீர்வுகளைப் பயன்படுத்துவதற்காக வினைத்திறனான பொறிமுறையொன்றைத தயாரித்தல்<br>34. தேசிய புத்தாக்க நிறுவனத்தைத் தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்<br>35. விஞ்ஞான, தொழில்நுட்ப, சமூக மற்றும் பொருளாதார ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்திப் பணிகளை விரிவுபடுத்தத் தேவையான<br>36. புதிய கண்டுபிடிப்புககளில் மக்களை ஈடுபடுத்துதல் மற்றும் ஊக்குவித்தல்<br>37. பல்கலைக்கழக மானியங்கள் | | |

| | | |
|---|---|---|
| ஆணைக்குழுவின் நிருவாகத்திற்குட்பட்ட அரச பல்கலைக்கழக முகாமையும் விருத்தியும்<br>38. இலங்கையில் உயர்கல்வியின் பண்புத்தரத்தை முன்னேற்றும் நோக்குடன் சர்வதேச கல்வி நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்பாண்மைகளுடன் இணைதலும் ஒத்துழைப்பை மேம்படுத்தலும்<br>39. உயர்கல்விக்குரிய அணுகுமுறைகளை விரிவுபடுத்தலுக்குரிய அளவுகோள்களை இனமறிதலும் செயற்படுத்தலும்<br>40. உள்நாட்டு மற்றும் சர்வதேச தொழில்சந்தையை இலக்காகக்கொண்டு பட்டதாரிகளை உருவாக்குவதற்காக ஒட்டுமொத்தக் கல்விச் சீர்திருத்தக் கொள்கைக்குள் பாடநெறிகளை ஒழுங்கமைத்தல்<br>41.பல்கலைக்கழகக் கல்வியில ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களை ஊக்குவிப்பதறகான வசதிகளை வழங்குதல்<br>42.நேர்த்தியான கல்விப் பல்கலைக்கழகங்களை உருவாக்க நடவடிக்கை எடுத்தல்<br>43.அனைத்துப் பல்கலக்கழகங்களையும உலக தரப்படுத்தலில் உயர்நிலைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுத்தல்<br>44. இலங்கையில் தகைமைகளுடன் கூடிய மாணவர்கள் சர்வதேச | | |

| | | |
|---|---|---|
| பல்கலைக்கழகங்களுக்கு நுழையக்கூடிய வகையில் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல்<br>45. இலங்கையில் செயல்படுகின்ற தனியார் மற்றும் சர்வதேச ரீதியான பல்கலைக்கழகங்களையும் உயர்கல்வி நிறுவனங்களையும் ஒழுங்குபடுத்தத் தேவையான நடவடிக்கை எடுத்தல்<br>46. பௌத்த மற்றும் பாளி ஆகிய கல்வியை மேம்படுத்துதல் மற்றும் பிக்குமார்களின் உயர்கல்வி நடவடிக்கைகளுக்குத தேவையான வசதிகளை வழங்குதல்<br>47. உலகளாவிய தேவைகளுக்கு ஏற்ற வகையில் ஒட்டுமொத்த கல்வித்துறையும் உள்வாங்கப்படும் வகையில் கல்விச் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துதல்<br>48. கல்விச் சீர்திருத்தம் தொடர்பான சனாதிபதி செயலணி மற்றும் விசேட குழுக்களின் சிபார்சுகளை மக்களின் கவனத்திறகு உட்படுத்தி கல்வியின் மேம்பாட்டுக்குத தகுந்தவாறு அவறறை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை வகுத்தல்<br>49. தகவல் தொழில்நுட்பத்தைத் தொடர்புபடுத்தி தொலைக்கல்விக்கான வாய்ப்புக்களைவ விஸ்தரித்தல்<br>50. பயனுள்ள கல்வி மற்றும் கல்வி கற்பிக்கும் செயற்பாட்டினை வெற்றியடையச் செய்வதற்காகத் | | |

| | | |
|---|---|---|
| தேவையான ஆசிரியர்களை உருவாக்குதல் மற்றும் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தல் மற்றும் அவர்களின் திறமையினை மேம்படுத்தல்<br>51. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்கான நடவடிக்கைகளும்<br>52. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களையும் கண்காணித்தல் | | |

**10. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| **கடமைகளும் பணிகளும்** | **திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்** |
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பற்றிய விடயங்களுடனும் மற்றும் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களுடனும் தொடர்பான விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயாரித்தலும், நடைமுறைப்படுத்தலும், தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும் | 1. வீதி அபிவிருத்தி அதிகார சபையும் அதன் துணைக் கம்பனிகளும் இணைக் கம்பனிகளும்<br>2. நீக்கப்பட்டுள்ளது.<br>3. மக நெகும<br>4. அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம்<br>5. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு<br>6. வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசியசபை<br>7. இலங்கை புகையிரதத் திணைக்களம்<br>8. வரையறுக்கப்பட்ட லக்திவ பொறியியல் (தனியார்)கம்பனி<br>9. இலங்கை போக்குவரத்துச் சபை<br>10. தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்<br>11. மோட்டார் வாகனப் போக்குவரத்துத் | • (2008ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க) தேசிய பொது வழிகள் சட்டம்<br>• (1981ஆம் ஆண்டின் 73ஆம் இலக்க) வீதி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்<br>• (2008ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க) தேசிய பொது வழிகள் சட்டம்<br>• (1991ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க) தேசிய போக்குவரத்து ஆணைக் குழுச் சட்டம்<br>• (1950ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க) புகையிரதச் சட்டம்<br>• (2005ம் ஆண்டின் 27ஆம் இலக்க) இலங்கை போக்குவரத்துச் சபைச் சட்டம்<br>• (1997ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க) தேசிய |

| | | |
|---|---|---|
| 2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைப்புச் செய்தல்,<br>4. கிராமிய, நகர மற்றும் நகர்புறப் பிரதேசத் தொடர்புகளை விரிவுபடுத்தி மக்களைக் கேந்திரமாகக்கொண்ட பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்தி ஏற்படும் வகையில் உயர்தரத்திலான தேசிய நெடுஞ்சாலைகள் கட்டமைப்பினை மேம்படுத்தலும் அவற்றைச் சிறந்தமுறையில் பேணுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தலும்.<br>5. அதிவேகப் பாதைகளின் அபிவிருத்திப் பாவனைக் கட்டணங்களை விதித்தலும் சேகரித்தலும் ஒழுங்குபடுத்தலும்<br>6. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான வீதிகள் பற்றிய தேசிய ரீதியிலான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தமைத்தலும் | திணைக்களம் | போக்குவரத்து மருத்துவ நிறுவகச் சட்டம்<br>• (1951 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) மோட்டார் வாகன போக்குவரத்துச் சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையும ான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

| | | |
|---|---|---|
| கூட்டிணைத்தலும் செயலாட்சி செய்தலும்<br>7. வாகன நெரிசல்களைக் குறைப்பதற்காக வாகனத் தரிப்பிடங்களை நிறுவுதல்<br>8. கிராமிய பாதை வலையமைப்பை அபிவிருத்தி செய்தலும் நவீனமயப்படுத்தலும<br>9. பிரதான பாதைகள் மற்றும் அதிவேகப் பாதைகளுக்காக உயர்மட்டத்திலான பிரவேசத்திற்காக மாற்று பாதைத் தொகுதியொன்றை தயாரித்தல்<br>10. பாதை வலையமைப்புடன் இணைந்த பாலங்கள் தொகுதியை நவீனமயப்படுத்தல்.<br>11. பயணிகளுக்கு படகுத்துறைச் சேவைகளை வழங்கல்<br>12. பாதுகாப்பானதும் நம்பகத்தகுந்ததுமான பயணிகள் போக்குவரத்துச் சேவைகளை வழங்குதல்<br>13. சூழல் நேயமிக்க போக்குவரத்து முறைமையொன்றை அறிமுகப்படுத்துதல்<br>14. தனியார் போக்குவரத்துச் சேவைகளை ஒழுங்குபடுத்தல்<br>15. பஸ்வண்டிகள் உற்பத்தி மற்றும் போக்குவரத்துது துறைக்குரிய உள்ளூர் கைத்தொழில் கட்டமைப்பொன்றை ஏற்படுத்துதல்<br>16. புதிய புகையிரதப் பாதைகளை நிர்மாணித்தல், இருக்கின்ற புகையிரதப் பாதைகளை விரிவாக்குதலும் அதற்குரிய காணிகளை கையகப்படுத்துதலும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் உள்ளிட்ட | | |

| | | |
|---|---|---|
| அனைத்து நடவடிக்கைகளும்<br>17. துறைமுகங்களுக்குப் புகையிரதம்மூலம் பண்டங்களை ஏற்றிச்செல்லும் வசதிகளை ஏற்படுத்துதலும் விஸ்தரித்தலும்<br>18. மோட்டார் வாகனங்களின் பதிவும், அனுமதிப்பத்திரம் வழங்கலும்<br>19. சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல்<br>20. மோட்டார் வாகனங்களுக்கு உரிய சட்டதிட்டங்கள் மற்றும் வழிகாட்டி நெறிகளை வழங்குதலும் ஒழுங்குபடுத்தலும்<br>21. பச்சைவீட்டு காற்று வெளியேற்றப்படுதலைக் குறைப்பதற்காக போக்குவரத்துத் துறை பங்களிக்கக்கூடிய வகையில் உபாயமுறையிலான நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல்<br>22. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்குரிய பணிகளும்<br>23. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களையும் கண்காணித்தல் | | |

**11.வெகுசன ஊடக அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| **கடமைகளும் பணிகளும்** | **திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்** |

| | | |
|---|---|---|
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட வெகுசன ஊடக விடயத்துடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப் படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைத்தல்<br>4. மக்களுக்குச் சரியான தகவல்களை அறிந்துகொள்ளும் மக்களின் உரிமையை உறுதிப்படுத்தத் தேவையான வழிமுறைகளைக் கையாளுதல்<br>5. அரசாங்கத்தின் அச்சிடுகையும் பிரசுரித்தலும்<br>6. மக்களது உளப்பாங்குகளை நல்வழியில் மையப்படுத்தி பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் துறைகளின் முன்னேற்றக் கூறாக வெகுசன ஊடகத்தின் பங்களிப்பிற்குத் தேவையான திறமுறைகளை வகுத்தமைத்தல் | 1. தகவல் அறியும் உரிமை பற்றிய ஆணைக்குழு<br>2. அரச அச்சகத் திணைக்களம்<br>3. அரச தகவல் திணைக்களம்<br>4. இலங்கை பத்திரிகை சபை<br>5. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்<br>6. சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு<br>7. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்<br>8. வரையறுக்கப்பட்ட இலங்கை ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனி<br>9. வரையறுக்கப்பட்ட லங்கா பத்திரிகை நிறுவனம்<br>10. செலசினே மீடியா சொலுஷன்ஸ் (பிரைவட்) லிமிடட்<br>11. இலங்கை மன்றக் கல்லூரி<br>12. தபால் திணைக்களம்<br>13. இலங்கை அச்சக நிறுவனம்<br>14. பகிரங்க அரங்காட்டற் கட்டுப்பட்டுச் சபை<br>15. தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் | • (2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க) தகவல் அறியும் உரிமைபற்றிய சட்டம்<br>• (1973ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க) இலங்கைப் பத்திரிகைப் பேரவைச் சட்டம்<br>• (1966ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டம்<br>• (1996ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன (விசேட ஏற்பாடுகள்) சட்டம்<br>• (1986ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க) இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனச் சட்டம்<br>• (1973ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க)அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டெட் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்<br>• (1839ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க) பத்திரிகைக் கட்டளைச் சட்டம்<br>• (1973ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க) இலங்கை மன்றச் சட்டம்<br>• (1909ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க) முத்திரை கட்டளைச் சட்டம்<br>• (1908ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க) தபால் அலுவலகக் கட்டளைச் சட்டம்<br>• (1984ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க) தபால் அலுவலகக் கட்டளைச் சட்டம்<br>• (1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க)அரச திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டம்<br><br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் |

| | | |
|---|---|---|
| 7. ஊடகப் பயன்பாட்டுக்காக நவீன தொழில்நுட்பப் பயன்பாட்டை மேம்படுத்துதல்<br>8. வெகுசன ஊடகக் கொளகையொன்றை அறமுகம்செய்தல்<br>9. அரச உத்தியோகபூர்வ அறிவித்தல்கள், செய்திகளை வெளியிடுதலுடன் தொடர்பான அரச நிறுவனங்களைச் சிறந்த ஒருங்கிணைப்புடன் மக்களுக்கு அறிவூட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.<br>10. இலங்கை பற்றிய தகவல்களை உள்நாட்டு, வெளிநாட்டு ஊடக நிறுவனங்களுக்கு வழங்குதல்<br>11. வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதராண்மைக் குழுக்களுக்கு அவசியமான தகவல்களையும் விளம்பரச் சேவைகளையும் வழங்குதல்<br>12. செய்திகள், திரைப்படங்கள், விவரண நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றைத் தயாரித்தலும் காட்சிப்படுத்துவதற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுத்தலும்<br>13. வாணிப தொலைக்காட்சி, வானொலி ஒலிபரப்புகள் மற்றும் வெளிநாட்டு அலைவரிசைகள் உட்பட வானொலி பிரசாரப் பணிகள்<br>14. புதிய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ முறைகளைப் பயன்படுத்திப் பல்வகைத்தன்மையினுாடாகத் தொழில்துறைகளை நோக்காகக்கொண்ட நவீன தபால் சேவைகளை வழங்குதலும் அதனை வினைத்திறமையாகப் பேணுதலும்<br>15. இலங்கை முத்திரைப் பணியகத்தின் நிருவாகம்<br>16. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்குரிய பணிகளும்<br>17. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் | | இங்குI ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப் பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

| | | |
|---|---|---|
| கண்காணித்தல் | | |

**12. சுகாதார அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| **கடமைகளும் பணிகளும்** | **திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்** |
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட சுகாதார விடயத்துடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவும்நவீன | 1. தேசிய சுகாதார மன்றம்<br>2. சுகாதார ஆராய்ச்சி நிறுவகம்<br>3. தேசிய சுகாதாரக் கல்வி நிறுவகம<br>4. இலங்கை மருத்துவ மன்றம்<br>5. இலங்கை மருத்துவக் கல்லூரி மன்றம்<br>6. தனியார் மருத்துவ நிறுவக மன்றம்<br>7. சுகாதார சேவைகள் திணைக்களம்<br>8. சகல தேசிய, போதனா மற்றும் குறித்துரைக்கப்பட்ட அரசாங்க மருத்துவமனைகள்<br>9. மருத்துவ ஆய்வுகூட தொழினுட்பப் பாடசாலை<br>10.தேசிய சிறுநீரக சுத்திகரிப்பு மீள்நடுகை நிறுவனம்<br>11.ஜயவர்தனபுர பொது மருத்துவமனை<br>12.விஜய குமாரணதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை<br>13.அஷ்ரப் ஞாபகார்த்த மருத்துவமனை<br>14.புகையிலை மற்றும் போதைப்பொருள் பற்றிய தேசிய அதிகாரசபை<br>15.1990 சுவசெரிய மன்றம்<br>16.தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம் | • (1952 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க)சுகாதார சேவைகள் சட்டம்<br>• (1927 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க) மருத்துவக் கட்டளைச் சட்டம்<br>• (1912 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க) மருத்துவத் தேவைகள் கட்டளைச் சட்டம்<br>• (1870 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) மன நோய்க் கட்டளைச் சட்டம்<br>• (1981ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க) தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியச் சட்டம்<br>• (1949 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க)ஆதுலர்மனைகள் (ஒழுங்குபடுத்தல்) சட்டம்<br>• (1929 ஆம் ஆண்டின் **17 ஆம்** இலக்க) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச் சட்டம்<br>• (2006ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க) தனியார் மருத்துவ நிறுவன (பதிவுச்) சட்டம்<br>• (1988ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க) இலங்கை தாதிகள் பேரவைச் சட்டம்<br>• (1987ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க) மனித இழையங்களை மாற்றிப் பொருத்துதல் சட்டம்<br>• (1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க) உணவுச் சட்டம் |

| | | |
|---|---|---|
| முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைத்தல்<br>4. பொதுமக்களுக்கான சுகாதார சேவைகளை உயர்தரத்துடன், மக்களுக்குச் சாதகமாக முன்னெடுப்பதற்கான கொள்கைகளைத் தயாரித்தல், நடைமுறைப்படுத்துதல்.<br>5. பொதுமக்களின் சுகாதாரத்தையும் போசாக்கினையும் மேம்படுத்துவதற்குத் தேவையான நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் நடைமுறைப்படுத்தலும்<br>6. தொற்று நோய்கள், பரவும் நோய்கள் மற்றும் தொற்றா நோய்கள் பரவுதலைக் கட்டுப்படுத்தல் மற்றும் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்<br>7. சர்வதேச தொற்றுநோய்த் தடைகாப்பு மற்றும் துப்புரவேற்பாட்டு ஒழுங்குவிதிகளைச் செயற்படுத்துதல்<br>8. சகல வைத்தியசாலைகளுக்கும் அத்தியாவசியமான பௌதீக மற்றும் மனிதவளங்களை வழங்குதல்<br>9. சுகாதாரத் துறையினுள் ஆராய்ச்சிச் சந்தர்ப்பங்களை விரிவுபடுத்துவதற்காக நவீன உபாயமுறைகளை அறிமுகம் செய்தல்<br>10. சுகாதார சேவைக்குரிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களைச் செயற்படுத்துதல் | 17.அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்<br>18.அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்<br>19.தேசிய மருந்தாக்கல் ஒழுங்குறுத்துகை அதிகார சபை<br>20.ஆயுர்வேத திணைக்களம்<br>21.இலங்கை ஆயுர்வேத மருந்துப்பொருள் கூட்டுத்தாபனம்<br>22.ஆயுர்வேத மருத்துவ மன்றம்<br>23.ஆயுர்வேத கல்லூரியும் மருத்துவமனைச் சபையும்<br>24.ஆயுர்வேத போதனா மற்றும் ஆராய்ச்சி மருத்துவமனை<br>25.ஹோமியோபதி மருத்துவமனை, வெலிசறை<br>26.ஹோமியோபதி மருத்துவ மன்றம்<br>27. சிறு நீரக நிதியம் | • (1983ஆம் ஆண்டின் 54ஆம் இலக்கம்)ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசலை சபைச் சட்டம்<br>• 1999ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க) விஜய குமாரணதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை சபைச் சட்டம்<br>• (2006ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க) புகையிலை மற்றும் அற்ககோல் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டம்<br>• (2018 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) 1990 சுவசெரிய மன்றச் சட்டம்<br>• (2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க) தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்துகை அதிகாரசபைச் சட்டம்<br>• (1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) ஆயர்வேத சட்டம்<br>• (1970 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) ஹோமியோபதி சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமா ன விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

| | | |
|---|---|---|
| 11. தனியார் வைத்தியசாலைகள், வைத்திய சேவைகள் மற்றும் ஆய்வுகூட பணிகளைத் தேசியக் கொள்கையொன்றினுள் ஒழுங்குறுத்துகை செய்தல் மற்றும் முறையான சேவையொன்றை வழங்குவதற்காகத் திறமுறையொன்றைத் தயாரித்தல்<br>12. சகல மாவட்டங்களிலும் வைத்தியசாலையொன்றை தேசிய வைத்தியசாலை மட்டத்திற்கு விருத்திசெய்தல் மற்றும் மாவட்டத்தினுள் உள்ள ஏனைய பிரதேச மற்றும் ஆரம்ப வைத்தியசாலைகளின் வசதிகளை விரிவுபடுத்தல்<br>13. இலங்கை வைத்தியசேவையின் மற்றும் ஏனைய உரிய சுகாதார சேவைகளை நிர்வகித்தல் மற்றும் ஆளணி முகாமைத்துவம்<br>14. மருத்துவம் மற்றும் குறைநிரப்பு மருத்துவச் சேவையின் பண்புத்தரத்தையும் திறன்களையும் விருத்தி செய்வதற்குத் தேவையான பயிற்சி வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்<br>15. பாடசாலைச் சுகாதார சேவைகள் மற்றும் பல்மருத்துவ சேவைகளையும் நடைமுறைப்படுத்துதல்<br>16. பொது துப்புரவேற்பாடும் புகையிரத சேவை துப்புரவேற்பாடும்<br>17. பெருந்தோட்டத் துறையின் சுகாதார பணிகள் | | |

| | | |
|---|---|---|
| 18. தேசிய குருதிமாற்றுச் சேவைகள் தொடர்பான பணிகள்<br>19. திரீபோசா மற்றும் விசேடமாகச் பாலூட்டும் தாய்மார்களுக்காக போசாக்குடன்கூடிய உணவுகளை வழங்கல் மற்றும் விநியோக நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துதல்<br>20. 1990 சுவசெரிய அம்புயலன்ஸ் சேவையை வினைத்திறனாகப் பேணுதல்<br>21. ஔடத வகைகளை உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல் மற்றும் விநியோகித்தலை உயர்ந்த தரத்தில் மற்றும வினைத்திறனான விதத்தில் செய்தல்<br>22. தரமான ஔடத உற்பத்தி மற்றும் இறக்குமதி<br>23. வர்த்தக ஏகபோக உரிமையைத் தடுத்தல் மற்றும் நுகர்வோரைப் பாதுகாக்கும விதத்தில் ஔடத விலைகளைக் கட்டுப்படுத்துதல்<br>24. ஔடத இறக்குமதியை வெளிப்படைத்தன்மையுடன ான பெறுகைச் செயற்பாடொன்றினுள் மேற்கொள்ளுவதற்குக் கவனம செலுத்துதல்<br>25. பாராம்பரிய வைத்திய முறைகளைப் பாதுகாத்தலும் அவற்றை மேம்படுத்துவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்<br>26. ஆயுர்வேத, சித்த, யூனானி மற்றும் ஹோமியோபதி மருத்துவ முறைகளின் அபிவிருத்தி, ஒழுங்குறுத்துகை மற்றும் செயற்படுத்துதல்<br>27. ஆயுர்வேத, சித்த, | | |

| | | |
|---|---|---|
| யூனானி மற்றும் ஹோமியோபதி மருந்து உற்பத்தி<br>28. ஆயுர்வேத, சித்த, யூனானி மற்றும் ஹோமியோபதி மருத்துவ முறைகளுக்கு அவசியமான மருந்து மூலப்பொருட்கள் மற்றும் தயாரித்த மருந்துப் பொருட்களின் இறக்குமதி, விற்பனை, விநியோகம்<br>29. ஆயுர்வேத, சித்த, யுனானி ஆகிய சுதேச வைத்திய துறைகளை மேம்படுத்துவதற்காக வைத்தியசாலைகள், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் மருந்தகங்களை நிறுவுதலும் முகாமை செய்தலும்<br>30. மூலிகைச் செடிகள் மற்றும் பதனிடப்பட்ட ஆயுர்வேத, சித்த, யூனானி, மருந்துப் பொருட்களின் ஏற்றுமதியின் ஒழுங்குறுத்துகை<br>31. ஆயுர்வேத மருந்துப்பொருள் தயாரிப்பாளர்களின் ஒழுங்குறுத்துகை<br>32. மூலிகைச் செடிகள் செய்கையை ஊக்குவித்தல் மற்றும் தேசிய மூலிகை வகைகளை ஊக்குவித்தலும் அதனுடன் தொடர்புடைய கருத்திட்டங்களை உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படுத்துதல்<br>33. ஆயுர்வேத மருந்துகளைத் தயாரிப்போர், ஆயுர்வேத மருத்துவத் தொழில்சார்ந்தோர், ஆயுர்வேத துணை மருத்துவ ஆளணியினரின் பதிவு<br>34. ஆயுர்வேத மருத்துவமனைகள், ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனங்கள் பயிற்சி நிறுவகங்கள் மற்றும் | | |

| | | |
|---|---|---|
| மருந்தகங்களையும் தாபித்தலும் நெறிப்படுத்தலும் ஊக்குவித்தலும்<br>35. சுற்றுலாப் பயணிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு தேசிய பாரம்பரிய மற்றும் ஆயர்வேத சிகிச்சை முறைகளுக்கு முன்னுரிமை வழங்கி சுற்றுலாச் சபையின் ஒருங்கிணைப்பு மற்றும் ஒழுங்குறுத்துகையினுள் செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்<br>36. தேசிய வைத்திய விஞ்ஞானத்துக்குரிய ஔடதங்கள் மற்றும் சிகிச்சை முறைகள் தொடர்பாக ஆராய்ச்சி செய்தலை ஊக்குவித்தல்<br>37. தேசிய மருத்துவ சேவையை நிருவகிததல் மற்றும் ஆளணி முகாமைத்துவச் செயற்பாடுகள்<br>38. .II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்கான நடவடிக்கைகளும்<br>39. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களையும் கண்காணித்தல் | | |

**13. நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| **கடமைகளும் பணிகளும்** | **திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்** |
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் | 1. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை<br>2. நீர் வளங்கள் சபை | • 1974ஆண்டின் 2ஆம் இலக்க) |

| | | |
|---|---|---|
| அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட நீர்வழங்கல் விடயத்துடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப் படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைத்தல்<br>4. ஒவ்வொரு பிரசைக்கும் சுத்தமான குடிநீர் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்<br>5. நீர்வழங்கல் சேவைகள், வடிகாலமைப்பு முறைமைகள் மற்றும் துப்புரவேற்பாட்டு வசததிகள் பற்றித் தேடிப்பார்த்து அதுபற்றிய புதிய திட்டங்களைத் தயாரித்துச் செயற்படுததுதலும் பராமரித்தலும்<br>6. கிராமிய குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசனக் | 3 தேசிய சமுதாய நீர்வழங்கல் திணைக்களம்<br>4. பெருந்தோட்டப் பிராந்தியத்திற் கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபை<br>5. பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம்<br>6. சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம்<br>7. பெருந்தோட்டத் துறை சுயதொழில் சுழற்சி நிதியம் | தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்<br>• (1964 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க) நீர் வளங்கள் சபைச் சட்டம்<br>• (2018 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க) பெருந்தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்<br>• (2005 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றச் சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையும ான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களுமக |

| | | |
|---|---|---|
| கட்டமைப்புகளைக் ஒருங்கிணைத்து நீர்பாதுகாப்பு மற்றும் நகர்ப்புற நீர்வழங்கல் திட்டங்களை அபிவிருத்தி செய்தல்<br><br>7. குடிநீரை விநியோகிக்கும்போது ஏற்படும் நீர் விரயத்தைத் தடுத்தல்<br>8. சமூக நீர்வழங்கல் மற்றும் கருத்திட்டங்களைச் செயற்திறனுடனும் ஒழுங்குமுறைக்கமையவும் முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்<br>9. கிராமப்புற மக்களுக்கு சிறந்த தரதத்திலான குடிநீரினை வழங்குவதற்காக சமூக நீர்வழங்கல் திட்டத்தைப் பராமரித்தலும் மேம்படுத்தலும்<br>10. கிராமப்புறங்களில் குடிநீர் வழங்கலை நிலையாக மேற்கொள்ளல் மற்றும் நீர்த்தேக்கங்கள், நிரேந்து பிரதேசங்கள் என்பவற்றை அபிவிருத்தி செய்தலும் நீரினைப் பாதுகாத்தலும்.<br>11. தேசிய நீரப்பாசனக் கட்டமைப்பினுடாகக் கிராமிய மற்றும் பிரதேச மட்டத்தில் நடைமுறையிலிருக்கும் நீர்வழங்கல் கருத்திட்டங்கள் சார்ந்த நீர் வழங்கல் திட்டங்களைத் துரிதப்படுத்துதல்<br>12. அரச மற்றும் தனியார் பெருந்தோட்டக் கம்பனிகளில் கடமை புரியும் காணிகள் அற்ற மக்களுக்கான வீட்டு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் புதிய கிராமங்கள் மற்றும் நகரங்களை உருவாக்குதல்<br>13.பெருந்தோட்டத் துறை மக்களை பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியில் வலுவூட்டுவதற்கான அடிப்படை வசதிகள், வாழ்வாதார உற்பத்தி மற்றும் சமூக அபிவிருத்திக் கருத்திட்டங்கள் உள்ளடங்கிய ஏனைய வசதிகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை | | |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளல்<br>14. கிராமிய பெருந்தோட்டத் துறைகளின் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்<br><br>15. பெருந்தோட்ட மக்கள் சமூக தலைமைத்துவம் மற்றும் சமூக பங்கேற்பு ""மக்கள் சபை மற்றும் மக்களை அடிப்படையாகக் கொண்ட நிலையங்களை"" தாபித்தல்.<br>16. பெருந்தோட்ட சமூகத்தின் பிள்ளைகளுக்கான ஆரம்பக் கல்வி மற்றும் சுகாதார வசதிகளை உறுதி செய்வதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தல்<br>17. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்கான நடவடிக்கைகளும்<br>18. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களையும் கண்காணித்தல் | | |

**14. கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| **கடமைகளும் பணிகளும்** | **திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்** |
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் பற்றிய விடயத்துடனும் மற்றும் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் | 1. கமத்தொழில் திணைக்களம்<br>2. கமநல அபிவிருத்தித் திணைக்களம்<br>3. கமத்தொழில் மற்றும் கமநல சேவைகள் காப்புறுதிச் சபை<br>4. நெல் சந்தைப்படுத்தல் சபை<br>5. ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம் | • (1999ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க) கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டம்<br>• (2000ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க) கமநல அபிவிருத்திச் சட்டம்<br>• 1982ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க) கிராமோதய சபைச் சட்டம்<br>• (1951 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க) மரங்களை வெட்டிச் |

| | | |
|---|---|---|
| மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுளுடனும் தொடர்பான விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயாரித்தலும், நடைமுறைப்படுத்தலும், தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைப்புச் செய்தல்,<br>4. உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும்வண்ணம் உணவு உற்பத்தி செய்தல்<br>5. இருப்பைக் கையாளுவதற்கும் மற்றும் வழங்கல் நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்காக நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்<br>6. பயிர் பல்வகைப் படுத்துகையின் அடிப்படையிலான கமத்தொழில் உற்பத்திகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கை எடுத்தல்<br>7. உள்நாட்டு கமத்தொழில் | 6. இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான மன்றம்<br>7. தேசிய கமத்தொழில் பல்வகைப்படுத்துகையும், குடியேற்ற அதிகாரசபையும்<br>8. தேசிய உரச் செயலகம்<br>9. வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி<br>10. கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி<br>11. இலங்கைத் தேசிய பட்டினி ஒழிப்புச் சபை (தேசிய உணவு மேம்பாட்டுச் சபை)<br>12. தேசிய பின் அறுவடை முகாமைத்துவ நிறுவகம்<br>13. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்<br>14. தேசிய கால்நடைவளங்கள் அபிவிருத்திச் சபையும் இணைக் கம்பனிகளும்<br>15. மில்கோ (பிறைவேட்) லிமிட்டெட்<br>16. வரையறுக்கப்பட்ட மகாவலி லைவ்ஸ்ரொக் என்ரபிரய்ஸ் கம்பனி<br>17. பிரதேச பொருளாதார நிலையங்கள்<br>18. தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம்<br>19. இலங்கை தேயிலைச் சபை<br>20. சிறு தேயிலைத்தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை<br>21. தேயிலை ஆராய்ச்சி நிறுவகம்<br>22. தேயிலை, இறப்பர், தென்னைத் தோட்டங்கள் | சாய்த்தல் (கட்டுப்பாட்டுச்) சட்டம்<br>• (2003 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க) விதை நெல் சட்டம்<br>• (1996ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க) மண்வளம் பேணல் சட்டம்<br>• (1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க)நெல் சந்தைப்படுத்தல் சபைச் சட்டம்<br>• (1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க) கமத்தொழில் அலுவல்கள் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனச் சட்டம்<br>• (1987 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க) விவசாய ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான இலங்கை மன்றச் சட்டம்<br>• 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) அரச கமத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டம்<br>• (1980ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க) களைநாசினி கட்டுப்படுத்தல் சட்டம்<br>• (1999ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க) தாவர பாதுகாப்புச் சட்டம்<br>• 1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க) பசளைகள் ஒழுங்குபடுத்தற் சட்டம்<br>• (1973 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) இலங்கைத் தேசிய பட்டினி ஒழிப்புச் சபை சட்டம்<br>• (1992ஆம் ஆண்டின் 59ஆம் இலக்க) விலங்கு நோய்ச் சட்டம்<br>• (1986ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க) விலங்கு தீனிச் சட்டம்<br>• (1958ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க) விலங்குகள் சட்டம் |

| | | |
|---|---|---|
| உற்பத்திகளின் பண்புரீதியான பெறுமதிகளை பாவனையாளர்களான நுகர்வோருக்கு உறுதிப்படுத்துவதற்குரிய திறமுறைகளைத் தயாரித்தல்<br>8. பாரம்பரிய விவசாயிகள், இளைஞர்யுவதிகள் மற்றும் மாணவர்களை நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய விவசாய கற்கைகளுக்காக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்<br>9. இளம் விவசாய தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல்.<br>10. இரசாயனக் களைநாசினிகள் மற்றும் ஏனைய இரசாயனக் கலவைகள் குறித்து வழங்கப்பட்ட தரத்துடன் பயன்படுத்தலும் ஒழுங்குறுத்தலும்.<br>11. விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்குப் பயிர்ச்செய்கை காப்புறுதி முறைமை மற்றும் விவசாய ஓய்வூதியத் திட்டங்களை விஸ்தரித்தல்<br>12. நேரடி உற்பத்தியாளர்கள், ஏற்றுமதிக் கம்பனிகள், பதனிடும் நிலையங்கள், மொத்த வர்த்தகக் கம்பனிகள் என்பவற்றுக்கிடையில் விநியோகம் தொடர்பான ஒருங்கிணைப்பினை வலுவூட்டுவதன்மூலம் விவசாயிகளின் உற்பத்திகளுக்கு அதிக விலையைப் பெற்றுக் கொடுத்தல<br>13. காலநிலை மாற்றங்கள் மற்றும் வானிலை தொடர்பான நாளாந்த தகவல்களை | (பிரித்தொதுக்குதல், கட்டுப்படுத்துதல்) சபை<br>23. இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்<br>24. இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம்<br>25. இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம<br>26. தேயிலை சக்தி நிதியம்<br>27. துருசவிய நிதியம்<br>28. ஏற்றுமதிக் கமத்தொழில் திணைக்களம்<br>29. இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம்<br>30. சரக்குவகைகள் மற்றும் அதனோடிணைந்த உற்பத்திகள் விற்பனைச் சபை<br>31. தெங்கு செய்கைச் சபை<br>32. தென்னை அபிவிருத்தி அதிகார சபை<br>33. தெங்கு ஆராய்ச்சி நிறுவகம்<br>34. பனை அபிவிருத்திச் சபை<br>35. கித்துல் அபிவிருத்திச் சபை<br>36. கப்ருக நிதியம்<br>37. கறுவா அபிவிருத்தி திணைக்களம் | • (1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) விலங்கு மருத்துவ தொழில்துறைச் சட்டம்<br>• (1979ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க) தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகச் சட்டம்<br>• (1958ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க) தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் (கூறுபோடுதலை கட்டுப்படுத்துதல்) சட்டம்<br>• (1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) இலங்கை தேயிலைச் சபைச் சட்டம்<br>• (1957ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க) தேயிலை கட்டுப்பாட்டுச் சட்டம்<br>• (1958ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க) தேயிலை உதவுதொகைச் சட்டம்<br>• (1959ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க) தேயிலை (வரி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு) சட்டம்<br>• (1993 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க) தேயிலை ஆராய்ச்சிச் சபை சட்டம<br>• (2000ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க) தேயிலை சக்தி நிதியச் சட்டம்<br>• (1975ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க) தேயிலை சிறு பற்று நிலங்கள் அபிவிருத்திச் சட்டம்<br>• (1953 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க) இறப்பரை மீண்டும் பயிர்ச்செய்வதற்காக உதவிவழங்கும் சட்டம் |

| | | |
|---|---|---|
| விவசாயிகளுக்கு வழங்குவதன்மூலம் இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்ளுதல்.<br><br>14. தரமான விதைகள், கன்றுகள் என்பவற்றை விவசாயிகளுக்கு வழங்குவதற்கான வழிமுறைகளை ஏற்படுத்துதல்.<br><br>15. நீர் முகாமைத்துவம் மற்றும் விவசாயிகளின் தேவைகளை முகாமைத்துவம் செய்தல்.<br>16. விவசாய அபிவிருத்தி வலயங்கள், விவசாயக் கிராமங்கள் நிலைபேறான வீட்டுத்தோட்டச் செநய்கைப என்பவற்றுக்கான அபிவிருத்தி வேுலைததிட்டங்களை மேம்படுத்துதல்<br><br>17. சிறிய அளவிலான விவசாயத் தொழில்முயற்சிகள் மற்றும் அமைப்புகளை எழுச்சிபெறச் செய்தலும் அவற்றை மேம்படுத்துவதற்கான வேலைதிதட்டங்களை நடைமுறைபபடுத்தலும்<br>18 சேதனப் பசளைப் பயன்பாடு மற்றும் நச்சுத்தன்மையற்ற உணவு உற்பத்தி தொடர்பில் அதிகளவில் ஈடுபாடு கொள்வதற்கான வேலைத்திட்டஙகளை விஸ்தரித்தலும் ஊக்குவித்தலும்<br>19. தரமான உர இறக்குமதி, விநியோகம் என்பவற்றை அரச நிவாரண கொள்கைத்திட்டத்திறகமையச் செயல்திறனுடன் நடைமுறைப்படுத்துதல்<br>20. சிறந்த தரத்திலான இரசாயனப் பசளைகள் | | • (1930 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க) இறப்பர் ஆராய்ச்சி சபைக் கட்டளைச் சட்டம்<br><br>• (1956 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டம்<br><br>• (2000ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க) துரு சவிய நிதியச் சட்டம்<br><br>• (1992 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) ஏற்றுமதி கமத்தொழில் அபிவிருத்திச் சட்டம்<br>• (1971ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க) தெங்கு பயிர்ச்செய்கை சபைச் சட்டம்<br>• (1950 ஆம் ஆண்டின் 37 ஆம இலக்க) தெங்கு ஆராய்ச்சிச் சபைச் சட்டம்<br>• (2005 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) கப்புறுக நிதியச் சட்டம்<br><br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும் |

| | | |
|---|---|---|
| மற்றும் சூழலுக்குச சாதகமான சேதனப் பசளைகளை உரிய நேரத்தில் பகிர்ந்தளிப்பதற்கான வழிமுறைகளைத் தயாரித்தல்<br>21 உள்நாட்டு மூலப்பொருட்களைப் பயன்படுததுவதன்மூலம் சர்வதெச தரத்துக்கமைய சேதனப் பசளை உற்பததியை ஊக்குவிதல்<br>22. உள்நாட்டு விவசாயிகள் மற்றும் நுகர்வோர் திருப்பதியடையும் வகையில நியாயமான விலைகளுக்கான கொள்கையொன்றையும் பயிரச்செய்கைககான பல்லினத்தன்மை வேலைத்திட்டமொன்றையும் நடைமுறைப்படுத்துதல்<br>23. வீட்டுத்தோட்டச் செய்கைக்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைபபடுத்தல்<br>24. மேலதிக உற்பத்திகளைக் களஞ்சியப்படுத்துவதற்காக முறையான வேலைத்திட்டமொன்றை வகுத்தல்<br>25. விவசாய உற்பத்திகளைப் பெறுமதிசேர்த்து எற்றுமதி செய்வதற்கான வேலைத்திட்டமொன்றை வகுத்தல்<br>26. சர்வதேச மட்டத்திலான தரமான விதை உற்பத்திகளுக்காக உள்நாட்டு விதைக் கொள்கைத் திட்டமொன்றை அறிமுகப்படுத்துதல்<br>27. தரமான விதைகள் மற்றும் பயிர்ச்செய்கைக்கான உற்பத்திகளுக்காக தனியார்துறையினரை | | |

| | | |
|---|---|---|
| ஊக்குவிததல<br><br>28. அரச விவசாயப் பண்ணைகள் மற்றும் விதை உற்பத்தி விவசாயப் பண்ணைகளை அபிவிருத்தி செய்தல்<br><br>39. உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிப்பதனமூலம் உணவுப் பயிர்களை இறக்குமதி செய்தலைக குறைத்தல்<br><br>30. கால்நடைவளப் பிரிவின் உற்பத்திகளை அதிகரித்தலுக்கான வசதிகளைச் செய்துகொடுத்தல்<br><br>31. கால்நடை நலன் அபிவிருத்தி மற்றும் அவை தொடர்பான நடவடிக்கைகள்<br><br>32. நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கால்நடை வளம்தொடர்பான ஆராய்ச்சிப் பிரிவினை விஸ்தரித்தலும் அதன் அடிப்படையில் தரமான உற்பத்தியினைப் போதுமான அளவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல்<br><br>33. கால்நடைகளின் இனப்பெருக்கத்தை அதிகரிப்பதற்காக விஞ்ஞான ரீதியில் இனவிருத்தி முறைகளை பிரபல்யப்படுத்தலும் நோய்களிலிருந்து அவற்றைப் பாதுகாத்தலும்<br><br>34. பல்வேறு வகையான பூகோளத் தேவகளுக்கமைய சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாயப் பண்ணைஅபிவிருத்தியை | | |

| | | |
|---|---|---|
| ஊக்குவித்தல்.<br><br>35. கால்நடைவளத் துறையைச் சேர்ந்த உற்பத்திகளை மேம்படுத்தலும் அவற்றை ஏற்றுமதிக்காக ஊக்குவிததலும்<br><br>36. நடுத்தர மற்றும் பாரிய அளவிலான கால்நடைப் பண்ணைகளை நிர்மாணிப்பதற்காகத் தேவையான காணிகளையும் முதலீட்டு வசதிகளையும் வழங்குதல்<br><br>37. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்தியாளர்களை மேம்படுத்துவதன்மூலம் உள்நாட்டு உற்பத்திகளையும் நுகர்வுக்கான வாய்ப்புகளையும் அதிகரித்தல்<br><br>38. இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரச் சேவையின் நிர்வாகமும் ஆளணி முகாமைத்துவமும்<br><br>39. உள்நாட்டு விவசாய உற்பத்திகளுக்கான சந்தை வசதிகளை விஸ்தரித்தல்<br><br>40. விலங்குணவிற்குத் தேவையான சோளத்தை நாட்டிற்குள் பயிரிடுவதற்கு நடவடிக்கையெடுத்தல்<br><br>41. இலங்கை கமத்தொழில் சேவையின் நிருவாகமும் ஆளணி முகாமையும்<br><br>42.பெருந்தோட்டப் கைத்தொழில்துறையின் செயலாற்றுகையை சர்வதேச மட்டத்துடன் போட்டியிடும் நிலைக்கு உயர்த்துவதற்காக<br>43.சர்வதேச சந்ததையை நோக்காகக்கொண்டு பெருந்தோட்டப் பயிர்களை | | |

| | | |
|---|---|---|
| அடிப்படையாகக்கொண்ட பெறுமதிசேர் உற்பத்திகள் தொடர்பான கைத்தொழில்களை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்<br>44. தேயிலை, இறப்பர் கைத்தொழில் அபிவிருத்தி, மேம்பாடு மற்றும் ஆராய்ச்சிகளுக்குரிய நடவடிக்கைகள்<br><br>45. தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குத் தோட்டங்களை பிரித்தொதுக்கி குடியிருப்புகள் நிர்மாணிப்பதை முடிந்தளவு கட்டுப்படுத்துதல்<br>46. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைத் தொழிலை புதிய தொழில்நுட்பஙகைப் பயன்படுத்தி அதிகரித்தல்<br><br>47. சிறு மற்றும் நடுத்தரளவிலான இறப்பர் தோட்ட உரிமையாளர்களை ஊக்குவிப்பதன் மூலம் இறப்பர் தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்களை இலகுபடுத்தல்<br>48. தேயிலை மற்றும் இறப்பர் தொடர்பான அனுமதிப்பத்திரம் வழங்குதல்<br>49. கிராமிய மட்டத்திலான தேயிலைச் செய்கை மற்றும் சிறு தேயிலைத்தோட்ட உரிமையாளர்களை ஊக்குவித்தல்<br>50. தேயிலை ஏற்றுமதிக்காக உரிமப்பத்திரங்களை வழங்குதல்<br>51. அரச மற்றும் தனியார்துறை ஆகிய இரண்டு துறையினதும் ஒத்துழைப்பில் சிலோன் டீ (Ceylon Tea) சார்பில் தேயிலைச் சந்தையை விரிவாக்குதல்<br>52. அரச மற்றும் தனியார் பெருந்தோட்டக் | | |

| | | |
|---|---|---|
| கம்பனிகளுக்குச் சொந்தமான காணிகளிலும் பயிர்ச்செகை நடவடிக்கைகளை ஊக்குவித்தல்<br>53. உள்நாட்டு வெளிநாட்டு சந்தையை இலக்காகக் கொண்டு இறப்பர் சார்ந்த உற்பத்திகளை ஊக்குவித்தல்<br>54. தோட்டத்துறையின் காணிகளை முறையாக பயன்படுத்தும் பொருட்டு திட்டமொன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்தல்<br>55. தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு தோட்டங்களைப் பிரித்தொதுக்கல் தொடர்பில் உரிமம் வழங்கலும் கட்டுப்படுத்தலும்<br>56. சிறு பெருந்தோட்ட பயிர்ச்சிசெய்கையாளர்களை ஊக்குவிப்பதற்காக வேலைத்திட்டங்களைச் செற்படுத்துதல்<br>57. ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து கூடிய விளைச்சலைதரும் பயிரினங்களை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.<br>58. புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உள்ளூர் உற்பத்திகளில் பெறுமதிசேர்ப்பதன்மூலம் , உயர் பெறுமதியைக்கொண்ட பொருட்களை உற்பத்திசெய்தல, ஏற்றுமதிச் சந்தைக்கான சந்தரப்பங்களை விரிவுபடுத்தல்<br>59. சிறிய பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைத் துறையைப் பாதுகாத்துசிறியஅளவிலான விவசாய உற்பத்தியாளர்களை உலகப் பொருளாதாரச் செயற்பாட்டினுள உள்வாங்குவதறகான நடவடிக்கைகள எடுததல் | | |

| | | |
|---|---|---|
| 60. சிறு பெருந்தோட்டச் செய்கைகளுக்குச் சிறந்த தரத்திலான நாற்றுகள் என்பவற்றை வழங்குவதன்மூலம் உற்பத்தித்திறனை மேம்படுததுவதற்கான சகல வசதிகளையும் வழங்குதல்<br>61. பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் உட்பட நிலைபேறான வளப் பயன்பாடும் உயிரினப் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கான கொள்கைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்<br>62. கறுவா, மிளகு போன்ற உள்நாட்டு உற்பத்திகளை மீள் ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக இலங்கை வர்த்தகக் குறியீட்டினகீழ் அவற்றை ஏற்றுமதி செய்யக்கூடிய வகையில் சந்தை நிலைமைகளுக்கு ஏற்ப மேம்படுத்துதல்<br>63. சிறு பெருந்தோட்ட பயிரச்செய்கைக்காக ஏற்றுமதிக் கிராமங்களைத் தாபித்தல்<br>64. தென்னை, கித்துல் மற்றும் பனை சார்ந்த கைத்தொழில் அபிவிருத்தி, மேம்பாடு மற்றும் அது தொடர்பான ஆராய்ச்சிகளுக்குரிய நடவடிக்கைகள்<br>65. உள்நாட்டு ரீதியில் தேங்காய்க்கான தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் மற்றும் தேங்காய், செவ்விளநீர் என்பவை தொடர்பாகப் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கான மூலோபாயங்களைத் தயாரித்தல்<br>66. பல்லினப் பயிர்ச்செய்கைகள் மற்றும் விவசாயப் பண்ணைகள்மூலம் செய்கைபண்ணக்கூடிய | | |

| | | |
|---|---|---|
| காணிகளை சிறந்தமுறையில் பயன்படுத்துவதும் இதன்மூலம் உற்பத்திகள் மற்றும் வேலைவாயப்புகளை அதிகரித்தல்<br>67. பூகோளநிலைமைகளைக் கருத்தில்கொண்டு அதிக விளைச்சலுடன்கூடிய தென்னை நாற்றுகளை அறிமுகம்செய்தல்<br>68. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளை இலக்காகக்கொண்டு புதிய தொழில்நுட்பத்துடன்கூடிய பெறுமதி சேர்க்கப்பட்ட தென்னை, கித்துல் மற்றும் பனை சார்ந்த கைத்தொழிலை மேம்படுத்துதல்<br>69. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்கான நடவடிக்கைகளும்<br>70. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களையும் கண்காணித்தல் | | |

**15. வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| **கடமைகளும் பணிகளும்** | **திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்** |
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு பற்றிய விடயங்களுடனும் மற்றும் 11 ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களுடனும் | 1. வனப் பாதுகாப்புத் திணைக்களம்<br>2. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்<br>3. தேசிய மிருகக்காட்சிச்சாலை திணைக்களம்<br>4. அரச மரக் கூட்டுத்தாபனம் | • (1907 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க) வனப்பாதுகாப்பு கட்டளைச்சட்டம்<br>• (1988ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க) தேசிய மரபுரிமை கானக இடப்பரப்புகள் சட்டம்<br>• 1937 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க) |

| | | |
|---|---|---|
| தொடர்பான விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயாரித்தலும், நடைமுறைப்படுத்தலும், தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைப்புச் செய்தல்,<br>4. காடுகள், வனவிலங்குகள், மாவடை மரவடை ஆகியவற்றின் பாதுகாப்பும் பேணுகையும<br><br>5. வனசீவராசிகள் பாதுகாப்புப் பிரதேசங்களில் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்குரிய சுற்றாடல் கட்டமைப்பினைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்<br>6. கிராமப்புறங்களில் உள்ள வீடுகள், சொத்துக்கள் மற்றும் பயிர்ச் செய்கைகளுக்கு வனவிலங்குகளினால் ஏற்படும் சேதங்களைக குறைத்தலுக்கான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்<br>7. யானைகள்-மனிதர்களுக்கு இடையிலான மோதல்களைத் தவிர்த்துக்கொள்ளும் வகையில் கிராமங்களையும் | | தாவர,வனவிலங்கின பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்<br>• (1982 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க)தேசிய மிருகக்காட்சிச்சாலைச் சட்டம<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

| | | |
|---|---|---|
| குடியிருப்புகளையும் பாதுகாப்பதற்காக கிரம மக்களின் பங்களிப்புடன் முறைமையென்றைத் தயாரித்துச் செயற்படுத்துதல்<br>8. மிருகங்கள், பறவைகள் மற்றும் ஊர்வன ஆகிய பல்வேறு விலங்குகளை ஒன்றுசேர்த்தலும் காட்சிப்படுத்தலும் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட அலுவல்கள்<br>9. காடுகளும் காட்டியலும்<br>10. வன அடர்த்தியைப் பாதுகாத்தலும் பசுமை உள்வாங்கலை விஸ்தரித்தலும்<br>11. நாட்டின் வன அடர்த்தியைப் பாதுகாத்துக்கொண்டு மரத் தேவையைப் பூர்த்திசெய்யும் நோக்கில் வணிக ரீதியான பயிர்ச்செய்கையை ஊக்குவித்தல்<br>12. சதுப்பு நிலங்கள் மற்றும் கண்டல் தாவரங்களைப் பேணிப் பாதுகாத்தல்<br>13.பசுமை மற்றும் செம்மையான நகரங்கள் எனும் எண்ணக்கருவை பிரபல்யப்படுத்துவதன்மூலம் சுற்றுச்சூழல் தொடர்பாக உணர்வுபூர்வமான வகையில் செயற்படக்கூடிய மக்களை உருவாக்குதல்<br>14. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்குரிய பணிகளும்<br>15. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**16. நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல்யாப்பு மறுசீரமைப்பு அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| **கடமைகளும் பணிகளும்** | **திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்** |
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல்யாப்பு மறுசீரமைப்பு தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் | 1. சட்டமா அதிபர் திணைக்களம்<br>2. சட்ட வரைஞர் திணைக்களம்<br>3. கடன் நிவாரண சபைத் திணைக்களம்<br>4. அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம்<br>5. உயர்நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம்<br>6. இலங்கை சட்டவரைவு ஆணைக்குழு<br>7. உயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி முகாமைச் சபை<br>8. இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு<br>9. மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு<br>10. சட்டக் கல்விச் சபை<br>11. இலங்கை வாணிப மத்தியஸ்த நிலையம்<br>12. ஸ்ரீ லங்கா இன்டநஷனல் ஆர்பிடேஷன் சென்ரர் (கரன்டி) லிமிட்டெட்<br>13. தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகம் (அமைச்சின் பணிகளைச் செயற்படுத்துவதற்கான நிறுவனம் ஆகும்)<br>14. காணாமல்போனோர் ஆட்கள் பற்றிய அலுவலகம்<br>15. இழப்பீட்டு அலுவலகம்<br>16. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாரள்களைப் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை<br>17. சிறைச்சாலைகள் | • (1987ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க) உயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி முகாமை சபைச் சட்டம்<br>• (2001ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க) சர்வதேச சிறுவர் கடத்தலின் குடியியல் துறைகளுக்குரிய சமவாயச் சட்டம்<br>• (1974 ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க) சட்ட கல்விச் சபைச் சட்டம்<br>• (1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க) கடன் நிவாரண சபைக் கட்டளைச்சட்டம்<br>• (1956 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க) வெளிநாட்டு வழக்குத் தீர்ப்புக்களை வலுப்படுத்தல் கட்டளைச் சட்டம்<br>• (1988 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க) அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் (பண்டங்களை அகற்றுதல்) சட்டம்<br>• (1990 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) மாகாண மேல்நீதிமன்ற (விசேட ஏற்பாடுகள்) சட்டம்<br>• (1978ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க) கூட்டுத்தாபன வழக்குரைஞர் நிறுவகச் சட்டம்<br>• (1978ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க) நீதித்துறை ஏற்பாட்டுச் சட்டம்<br>• (1961 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க) நீதிமன்ற மொழிச் சட்டம் |

| | | |
|---|---|---|
| திட்டங்களையும் மீளமைத்தல்<br>4. சமூகத்தேவைகள் மற்றும் உலகளாவிய போக்குகளைக் கவனத்தில்கொண்டு சட்ட முறைமைக்குத் தேவையான மறுசீரமைப்புகளைச் செய்தல்<br>5. சட்டத்தை மீள் ஆவணப்படுத்தலும் கோவைப்படுத்துதலும்<br>6. அரசியலமைப்பின் மூலம் வேறெவரிடத்தும் சாட்டப்பெறாத நீதி நிருவாகம் தொடர்பான நீதிமன்றங்களின் நிருவாக அலுவல்கள்<br>7. நீதிமன்ற முறைமைக்குள் நீதி நிருவாகத்தில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்த்தலும் ஒட்டுமொத்த நிருவாகத்துடன் தொடர்புடைய சகல பணிகளையும் முறையாகவும் வினைத்திறமையுடனும் நிறைவேற்றுதலும் மற்றும் அதற்காக நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்<br>8. அரசாங்கம் சார்பாக குற்றவியல் வழக்கு தாக்கல் செய்தலும் சிவில் சட்ட நடவடிக்கைகளும்<br>9. அரசுக்கும் சகல அரச திணைக்களங்களுக்கும் சட்ட மதியுரை வழங்குதல்<br>10. சட்ட வரைவுகளைத் தயாரித்தல்<br>11. யாதேனுமொரு குற்றவாளிமீது விதிக்கப்பட்ட தண்டனை தொடர்பில் மன்னிப்பளித்தல், குறித்த தண்டனையைக் குறைத்தல், தளர்த்துதல், தாமதித்தல், இடைநிறுத்தல் ஆகியன தொடர்பில் | திணைக்களம்<br>18. சமூக அடிப்படையிலான சீர்திருத்தத் திணைக்களம்<br>19. இளந்தவறாளிகளுக்கான பயிற்சிப் பாடசாலைகள்<br>20. புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் அலுவலகம் | • (1985 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) இலங்கை நீதிபதிகள் நிறுவனச் சட்டம்<br>• (1969ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க) சட்ட ஆணைக்குழுச் சட்டம்<br>• (1978ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க) சட்ட உதவிச் சட்டம்<br>• (1988ஆம் ஆண்டின் 72ஆம் இலக்க) மத்தியஸ்த சபைகள் சட்டம்<br>• (1840 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) மோசடி தவிர்த்தல் கட்டளைச் சட்டம்<br>• (1957 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க) சமூக இயலாமை தவிர்த்தல் சட்டம்<br>• (1979ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க) ஆரம்ப நீதிமன்ற ஏற்பாட்டுச் சட்டம்<br>• (1969 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க) அரசாங்க (சிவில் குற்றங்களுக்கான பொறுப்புக்கள்) சட்டம்<br>• (1926 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க) குற்றவியல் தவிர்த்தல் கட்டளைச் சட்டம்<br>• குவாசி நீதிமன்ற (நியமனங்களைச் செல்லுபடியாக்கல்) சட்டம்<br>• (2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) குற்றமொன்றில் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சியாளர்களுக்கு உதவியளித்தல் மற்றும் பாதுகாத்தல் சட்டம்<br>• (2000 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க) இலங்கை வாணிப மத்தியஸ்த நிலையச் சட்டம்<br>• (2016 ஆம் ஆண்டின் 14 |

| | | |
|---|---|---|
| பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல்<br>12. ஒட்டுமொத்த குவாசி முறைமையின் உற்பத்தித் திறன் மற்றும் வினைத்திறமையையும் உயர்த்துவதற்காக தகுந்த வேலைத்திட்டமொன்றை வகுத்தமைத்தலும் நடைமுறைப்படுத்தலும்<br>13. தொழில் நியாய சபைகளின் நிருவாகமும் அது தொடர்பான ஏனைய பணிகளும்<br>14. சிவில் முரண்பாடுகள், நீதிமன்றம் வரை செல்லாமல் தீர்ப்பதற்கு மத்தியஸ்த சபை செயற்பாட்டினை நடைமுறைப்படுத்துதல்<br>15. சட்டத்தை செயற்படுத்தும் முறை மற்றும் கட்டமைப்பு தொடர்பாக உரிய நபர்களுக்குத் தேவையான நவீன அறிவு மற்றும் தொழில்நுட்ப பயிற்சியினை வழங்குதல்<br>16. குற்றமொன்றினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்களுக்கு உதவுவது மற்றும் பாதுகாப்பது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்<br>17.காணாமல்போனவர்களைத் தேடுதல் மற்றும் காணாமல்போனோர் உட்பட அவர்களின உறவினர்களது உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான நடவடிக்கை<br>18. மோதல்கள் மற்றும் நெருக்கடிகள் காரணமாகப் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு இழப்பீகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள்<br>19. நாட்டினுள் தேசிய | | ஆம் இலக்க) காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தை (தாபித்தல், நிருவகித்தல் மற்றும் அதன் பணிகளை நிறைவேற்றுதல்) சட்டம்<br>• (2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க) இழப்பீட்டுக்கான அலுவலகச் சட்டம்<br>• (1877ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க) சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டம்<br>• (1939 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) சட்டம்<br>• (1999 அம் ஆண்டின் 46 ஆம் இலக்க) சமூக அடிப்படையிலான சீர்திருத்தச் சட்டம்<br>• (2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க) புனர்வாழ்வுப் பணியகச் சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையும ான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

| | | |
|---|---|---|
| ஒருமைப்பாடு மற்றும் மீளிணக்கத்தையும் நீண்டகால சமாதானத்தையும் மேம்படுத்தலும் அதற்காக தேசியக் கொள்கைரீதியிலாக சட்டகமொன்றைத் தயாரித்தலும்<br>20. இனங்களுக்கிடையில் ஒருமைப்பாடு மற்றும் சகவாழ்வை மீள்உருவாக்குவதற்கான கலந்துரையாடல் நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துதல்<br>21. மக்களின் இறைமை மற்றும் தேசியப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதை உறுதிப்படுத்த நடப்பத் தேவைகளுக்குனுப் பொருத்தமான வகையில் அரசியல் யாப்பினை மறுசீரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொளளுதலி<br>22. புதிய அரியலமைப்பொன்றைத் தயாரிப்பது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கெள்ளல்<br>23. சிறைச்சாலைகள் மறுசீரமைப்புக்குரிய கொள்கைகளையும், திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும்<br>24. சிறைச்சாலை நிருவாகமும் மறுசீரமைப்பும்<br>25. சிறைச்சாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதலும் நெரிசல்களை குறைப்பதும்<br>26. சிறைக்கைதிகளுக்கு புனர்வாழ்வளித்தல்<br>27. சமூக அடிப்படையிலான சீர்திருத்தக் கருத்திட்டங்கள் தொடர்பான செயற்பாடுகள் | | |

| | | |
|---|---|---|
| 28. மோதல்கள் காரணமாக சரீர மற்றும் உடல்ரீதியான உபாதைகளுக்குட்பட்ட ஆட்களை புனர்வாழ்வளிப்பதற்காக நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைச் செயற்படுத்துதல்<br>29. பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஆட்களை மீண்டும் சமூகமயமாக்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல்<br>30. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்குரிய பணிகளும்<br>31. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களையும் கண்காணித்தல் | | |

**17. சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| **கடமைகளும் பணிகளும்** | **திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்** |
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட சுற்றுலாத்துறை மற்றும் காணி விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், | 1. இலங்கைச் சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்<br>2. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை<br>3. இலங்கை சுற்றுலா, ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்<br>4. இலங்கை சம்மேளனப் பணியகம் | • (2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க) சுற்றுலாத்துறைச் சட்டம்<br>• (1928 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) தாவரவியல்பூங்கா கட்டளைச் சட்டம்<br>• (1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க)காணி |

| | | |
|---|---|---|
| நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப் படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைத்தல்<br>4. இலங்கையின் பிரதிமையை எடுத்துக்காட்டும் வகையில் தேசியக் கொள்கைகளுக்கு அமைவாக சுற்றுலாத்துறை கைத்தொழிலை அபிவிருத்தி செய்தலும் உயர்நிலைக்கு மேம்படுத்தலும்.<br>5. சுற்றுலாத்துறை முகவராண்மைகள் மற்றும் சுற்றுலாக் கைத்தொழிலில் ஈடுபடுவோர்களை பதிவுசெய்தல் மற்றும் ஒழுங்குறுத்துகை நடவடிக்கைகள்<br>6. இலங்கையின் உயிரியல் | **5.** தேசிய தாவரப் பூங்கா திணைக்களம்<br>6. காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்<br>7. காணிப் பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்<br>8. காணி நிர்ணயத் திணைக்களம்<br>9. காணிச் சீர்திருத்த ஆணைக்குழு<br>10. இலங்கை நிலஅளவையாளர் திணைக்களம்<br>11. நிலஅளவையாளர் மற்றும் நிலவரைபட நிறுவகம்<br>12. காணி அளவைச் சபை<br>13. காணி கையகப்படுத்தல் மீளாய்வுச் சபை | பயன்பாட்டு ஆணைக்குழுச் சட்டம்<br>• (1950ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க) காணி கொள்ளல் சட்டம்<br>• (1935 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம்<br>• (1942 ஆம் அண்டின் 61 ஆம் இலக்க) காணி மீட்சி கட்டளைச் சட்டம்<br>• (1979 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க)அரச காணி அளிப்புகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்<br>• (1947 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க) அரச காணிகள் கட்டளைச் சட்டம்<br>• (1979 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) அரச காணிகள் (ஆட்சி உரிமை மீளப் பெறுதல்) சட்டம்<br>• (2002ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க) நில அளவைச் சட்டம்<br>• (1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க) உரித்துப் பதிவுசெய்தல் சட்டம்<br>• (1931 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க) காணி நிர்ணய கட்டளைச் சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப் பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

| | | |
|---|---|---|
| பல்லினத்தன்மை, பெருமைமிகு வரலாறு, மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட உரிமைகள், சூழல் காலநிலை பல்லினத்தன்மை, கரையோர வளங்கள் போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டு விசேடமான சுற்றுலா நாடொன்றாக உள்ளூர் மற்றும் சர்வதேச சுற்றுலாப்பயணிகளை ஈர்ப்புச்செய்தல்<br>7. சுற்றுலாப் பயணிகளுக்கான விடுதிகள் மற்றும் களியாட்ட விடுதிகளுக்கான வசதிகளை வழங்குதல், சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஹோட்டல் வசதிகள், விமான மற்றும் கடல் பயண வசதிகளை மேம்படுத்துதல்<br>8. சுற்றுலாத் தொழிலில் ஈடுபடுவோர்கள் மற்றும் அதுசார்ந்த தொழில்முயற்சியாளர்களை வலுவூட்டுவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்<br>9. சுற்றுலாப்பயணிகளின் பாதுகாப்புத் தொடர்பான நடவடிக்கைகள்<br>10. அரச காணிகளின் நிருவாகம் மற்றும் முகாமை<br>11. காணிப் பயன்பாடுபற்றிய கொள்கையொன்றைத் தயாரித்தல்<br>12. காணிப் பயன்பாடுபற்றிய ஆலோசனைகளை வழங்குதல்<br>13. காணி நிர்ணயமும் காணி உரித்துப் பதிவு தொடர்பான பணிகளும்<br>14. நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான காணிகளை தாமதமின்றி சட்டரீதியான முறையில் வழங்குதல்<br>15. அரசின் | | |

| | | |
|---|---|---|
| நடவடிக்கைகளுக்குத் தேவையான காணிகளைக் கையகப்படுத்துதல்<br>16. காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்பட்டுள்ள காணிகளை நிர்வகித்தலும் சட்டத்திற்கமைவாக பகிர்ந்தளித்தலும்<br>17. காணி அளவை, வரைபடமாக்கல், காணித் தகவல்கள் என்பவற்றுடன் தொடர்புபட்ட சேவைகளை வழங்குதல்<br>18. அரசு மற்றும் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்குக் கையளிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பான தரவுக் கட்டமைப்பொன்றைத் தயாரித்தலும் இற்றைப்படுத்தி நடாத்திச்செல்லலும்<br>19. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்குரிய பணிகளும்<br>20. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களையும் கண்காணித்தல் | | |

**18. நீக்கப்பட்டது**

**19. கைத்தொழில் அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| **கடமைகளும் பணிகளும்** | **திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்** |
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் | 1. இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை<br>2. லங்கா லேலன்ட் | • (1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க) கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம் |

| | | |
|---|---|---|
| தாபிக்கப்பட்ட கைத்தொழில் விடயத்துடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப் படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைத்தல்<br>4. நடைமுறையிலுள்ள கைத்தொழில்துறைகளை வலுப்படுத்துவதற்கும், முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கும் அதிகரித்து புதிய கைத்தொழில்துறைகளுக்கான அணுகுமுறைகளை ஏற்படுத்துவதற்கும் தேவையான வழிமுறைகளைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்<br>5. வீழ்ச்சியடைந்துள்ள தொழில்முயற்சிகள் மற்றும் கைத்தொழில்கள் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்<br>6. உள்நாட்டுத் | லிமிட்டட்<br>3. லங்கா அசோக் லேலன்ட் லிமிட்டட்<br>4. வரை. தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம்<br>5. வரையறுக்கப்பட்ட கஹகொல்ல பொறியியலாளர் சேவைகள் கம்பனி (KESCO)<br>6. வரையறுக்கப்பட்ட இலங்கை சீமெந்துக் கம்பனி<br>7. கஹட்டகஹ கிறைபைட் லங்கா லிமிட்டெட்<br>8. இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனம் (செங்கல் மற்றும் ஓடு)<br>9. தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகார சபை<br>10. இலங்கை கனிய மணல் கம்பனி<br>11. சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சி மூலதனக் கம்பனி<br>12. சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சிகள் அதிகாரசபை<br>13. மரப்பொருட்கள் ஆக்க நிலையம்<br>14. தேசிய அருங்கலை பேரவை<br>15. புடவைக் கைத்தொழில் திணைக்களம்<br>16.இலங்கை நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவகங்களும்<br>17. லங்கா ரெக்ஸ்ரைல் மில்ஸ் எம்போரியம் லிமிட்டெட்<br>18.லங்கா சலுசல லிமிட்டட்<br>19. இலங்கை கைத்தொழில் சபை (லக்சல)<br>20. தேசிய வடிவமைப்பு | • (1990 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) கைத்தொழில் மேம்பாட்டுச் சட்டம்<br>• (2006 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க)தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரச்சபை சட்டம்<br>• (1980 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க) இலங்கை விற்பனை நிறுவனச் (கூட்டுத்தாபனமாக்குதல்) சட்டம்<br>• (1982 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) தேசிய அருங்கலைப் பேரவையுடன் ஒருங்கிணைந்த நிறுவனங்கள் சட்டம்<br>• (1996 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ) தேசிய அருங்கலைப் பேரவை மற்றும் ஒருங்கிணைந்த நிறுவனங்களுக்கான விசேட ஏற்பாட்டுச் சட்டம்<br>• (2009 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) இலங்கை நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவனச் சட்டம்<br>• (1996 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) புடவைப் பங்குச் சபைச் சட்டம்<br>• (1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க) தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைச் சட்டம்<br>• (1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் மேம்படுத்துகைச் சட்டம்<br>• (1987 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) வியாபாரப் பெயர்ச் சட்டம்<br>• (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) கம்பனிகள் சட்டம்<br>• (1964 ஆம் ஆண்டின் 30 |

| | | |
|---|---|---|
| தொழில்முயற்சியாளர்கள் மற்றும் வர்த்தகர்களைப் பாதுகாப்பதும் அவர்களைப் பலகப்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை எடுத்தல்<br>7. சகல கைத்தொழிலாளர்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் குறிப்பிட்ட நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து தீர்த்து வைப்பதற்கான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்<br>8. இறக்குமதி ஏற்றுமதிச் செயற்பாட்டினை வினைத்திறனுடன் மேற்கொள்ளுவதற்காக ''ஒருங்கிணைந்த பொறிமுறையொன்றைத்'' தாபித்தல்<br>9. ஏற்றுமதி தொடர்பான உற்பத்திச் செயற்பாட்டினைப் பலப்படுத்துவதற்காகச் சகல மாகாணங்களும் உள்ளடங்கும் வகையில் கொள்கைகள், வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்குதலும் செயற்படுத்துதலும்<br>10. கைத்தொழில் பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக தேவையான வசதிகளை வழங்குதல்<br>11. நிலத்துக்குக் கீழும் கடலுக்கு அடியிலும் இருப்பதாகக் கருதப்படும் கனிய வளங்களை நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஆய்வுகளை மேற்கொண்டு உற்பத்திச் செயற்பாட்டுக்குப் பயன்படுத்துதல்<br>12. சிறிய மற்றும் மத்தியதர அளவிலான தொழில்முயற்சிகளை அபிவிருத்தி செய்தல்<br>13. பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், தளபாடங்கள் உட்பட கிராமியக் கைத்தொழில்களின் பெறுமதியை அதிகரிக்கக்கூடிய வகையில் | நிலையம்<br>21. தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை<br>22. இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம்<br>23. கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்<br>24. கம்பெனிகள் பதிவாளர் திணைக்களம்<br>25. வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் கம்பனி<br>26. விதாதா நிலையம் | ஆம் இலக்க) வர்த்தக அடையாளச் சட்டம்<br>• (1935 ஆம் ஆண்டின் 61 இலக்க) சீட்டுக் கட்டளைச் சட்டம்<br>• (1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க) பொது ஒப்பந்தச் சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப் பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

| | | |
|---|---|---|
| மேம்படுத்துவதற்காக முன்னுரிமை வழங்கி ஊக்குவிப்புகளை வழங்குதலும்<br>14. தச்சுத்தொழில், பிரம்பு உற்பத்தித்தொழில், பன்ன உற்பத்திகள் சார்ந்த மூலப்பொருட்கள் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வாக கூட்டுறவு முறையொன்றின்கீழ் அரச காணிகளை நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் வழங்கி அந்த மூலப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கான வாய்ப்புகளையும் ஊக்குவிப்புகளையும் வழங்குதல்<br>15. மரப்பலகை மற்றும் தளபாட உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கியுள்ள மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கான நெருக்கடிகளுக்குத் தீர்வு வழங்குதல்<br>16. வார்ப்பு மற்றும் உருக்குத்தொழில் போன்ற பாரம்பரிய கைத்தொழில் துறைகளுக்குத் தேவையான மூலப்பொருட்கள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணல்<br>17. இலங்கையின் உள்நாட்டுச் சந்தையினுள் ஆடை உற்பத்தி மற்றும் வழங்கலை விரிவுபடுத்துதல் உள்நாட்டு ஆடைகளுக்காக சுற்றுலாச் சந்தையை அபிவிருத்தி செய்தல்<br>18. பத்திக் உற்பத்தித்துறைக்குத் தேவையான வர்ண வகைகள் உட்பட உயர்தரத்திலான ஏனைய மூலப்பொருட்களை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்<br>19. உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக பத்திக் மற்றும் | | |

| | | |
|---|---|---|
| கைத்தறி நெசவுத் துறையைப் பிரபல்யப்படுத்துவதற்காக விசேட வேலைத்திட்டமொன்றைச் நடைமுறைப்படுத்துதல்<br>20. உள்ளூர் புடவைகள் மற்றும் ஆடைகளை விற்பனைப் பேட்டைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கெள்ளுதல்<br>21. புடவை உற்பத்திச் சந்தைகளை ஆரம்பித்தலும் போட்டி அடிப்படையில் செயற்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கெள்ளலும்<br>22. இரத்தினக்கல், தங்க ஆபரணக் கைத்தொழில் மற்றும் விற்பனையை மேம்படுத்தலும் ஒழுங்குறுத்தலும்<br>23. தனியார் துறையுடன் போட்டாபோட்டி அடிப்படையில் இரத்தினக்கல் சார்ந்த கைத்தொழில்களை ஆக்கபூர்வமான அணுகுமுறையொன்றின் ஊடாக நவீனமயப்படுத்துதல்<br>24. பெறுமதி சேர்க்கப்படாது ஏற்றுமதி செய்வதைக் கட்டுப்படுத்தி அதற்குப்பதிலாக பெறுமதி சேர்க்கப்பட்ட இரத்தினக்கற்கள் சார்ந்த உற்பத்திகளின் ஏற்றுமதியை விருத்திசெய்தல்<br>25. இரத்தினக்கல் சார்ந்த கைத்தொழில்களில் ஈடுபடுவோர் மற்றும் அதில் ஈடுபாடுகொண்டுள்ளோர்களுக்காக அதுபற்றிய புதிய தொழில்நுட்ப அறிவை வழங்குவதற்கு பயிற்சிபெறும் சந்தர்ப்பங்களை வழங்குதல்<br>26. இரத்தினக்கல் கைத்தொழில் துறைகள் தொடர்பாகப் பெற்றுக்கொள்ள வேண்டிய அனுமதிப்பத்திரங்களை வழங்கும் செயற்பாட்டினை இலகுபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்<br>27. II ஆம் நிரலில் | | |

| | | |
|---|---|---|
| காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்கான நடவடிக்கைகளும்<br>28. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களையும் கண்காணித்தல் | | |

**20. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| **கடமைகளும் பணிகளும்** | **திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்** |
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு | 1. நகர அபிவிருத்தி அதிகார சபை<br>2. நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை<br>3. செலென்திவ இன்வெஸ்டமென்ட் லிமிட்டெட்<br>4. ஹொட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) தனியார் கம்பனி (PQ143)<br>5. தேசியப் பௌதீகத் திட்டமிடல் திணைக்களம்<br>6. கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை(பொது வசதிகள் சபை)<br>7. இலங்கை காணிகள் அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் நிர்வாகத்தின் கீழ் உள்ள கம்பனிகள் மற்றும் இணை கம்பனிகள்<br>8. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை<br>9. வரை. கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்<br>10. கட்டிடத் திணைக்களம்<br>11. அரசாங்கத் | • (1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க) நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்<br>• 1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க) நகர அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்<br>• (2008 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க)நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரச் சபைச் சட்டம்<br>• (1946 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க) நகர, கிராம நிர்மாணக் கட்டளைச் சட்டம்<br>• (1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) இருப்பிடக்கூறு சொத்தாண்மைச் சட்டம்<br>• (2018 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க)) இருப்பிடக் கூறு சொத்தாண்மை (விசேட ஏற்பாடுகள் சட்டம்<br>• (1999 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க)) இருப்பிடக் கூறு சொத்தாண்மை (விசேட ஏற்பாடுகள் சட்டம் |

| | | |
|---|---|---|
| நிறைவேற்றப்படுவதை உறுதிப் படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைத்தல்<br>4. மாநகர, நகர, புறநகர் அபிவிருத்தி திட்டங்களும் அதற்கு இணையான நடவடிக்கைகளும்.<br>5. நகர்ப்புறங்களின் பொருளாதாரம், சமூக மற்றும் பௌதீக அபிவிருத்திகளை ஒன்றிணைத்த விதிமுறையாக மேம்படுத்தலும் மற்றும் ஒழுங்குறுத்தலும்<br>6. குடிசைகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுநர்களுக்காக சகல வசதிகளுடனான வீடமைப்புத் திட்டங்களை நிர்மாணித்தல் மற்றும் விருத்தி செய்தல்<br>7. நடுத்தர வகுப்பினரின் வீட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் புதிய வீட்டுக் கருத்திட்டங்கள் மற்றும் கடன் வசதிகளை வழங்குதல்<br>8. வாடகை அடிப்படையில் தற்காலிக இருப்பிடங்களை எதிர்பார்ப்போருக்கு நியாயமான வாடகை அடிப்படையில் தொடர்மாடி வீட்டுத் திட்டமொன்றை அறிமுகம் செய்தல்<br>9. வீடமைப்பு நிர்மாண நிறுவனங்களுக்கு நிவாரண விலையின்கீழ் காணிகளை வழங்குவதன் மூலம் புதிய வீட்டுக் கருத்திட்டங்களுக்கு முதலீட்டாளர்களை ஊக்குவித்தல<br>10. நகரப்புறத் திண்மக் கழிவுப்பொருட்கள் | தொழில்சாலைகள் திணைக்களம்<br>12. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை<br>13. நீக்கப்பட்டுள்ளது.<br>14. ஓஷன் விவ் டிவலப்மெண்ட் பிறைவேட் லிமிட்டெட்<br>15. சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை<br>16.கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம் | • (1973 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க) பெது வசதிகள் சபைச் சட்டம்<br>• (1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) இலங்கை காணி அபிவிருத்தி செய்தல் கூட்டுத்தாபனச் சட்டம்<br>• (1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரச் சபைச் சட்டம்<br>• (2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க)கட்டிடக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம்<br>• (2008 இல 35) சமுத்திர மாசடைவு தடுப்புச் சட்டம்<br>• (1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க) கரையோரப் பாதுகாப்புச் சட்டம்<br>• (2022 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க) ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடிகளைத் தடைசெய்தல் சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமா ன விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

| | | |
|---|---|---|
| முகாமைத்தவம்<br>11. பொறுப்பற்ற கழிவகற்றலைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்<br>12. சகல நகர நிர்மாணங்களையும் நகர அபிவிருத்தித் திட்டங்களுக்கமையச் செய்வதை ஒழுங்குறுத்துவதற்குத் தேவையான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்<br>13. சகல நகர நிர்மாணங்களின்போது வாகனத் தரிப்பிடங்களை அமைப்பது மற்றும் அங்கவீனமுற்ற நபர்களுக்காக நுழைவு வசதிகளை ஏற்படுத்துவதை உறுதிசெய்தல்<br>14. தேசிய பௌதீகத் திட்டங்கள் மற்றும் பிரதேச பௌதீகத் திட்டங்களைத் தயாரித்தல்<br>15. இணைந்த நகர அபிவிருத்தியனை உறுதிப்படுத்துமுகமாக தேசிய பௌதீகத் திட்டங்களின் அடிப்படையில் அனைத்து நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளலும் ஒழுங்குறுத்தலும்.<br>16. கூட்டாதனச் சொத்துக்கள் முகாமை மற்றும் ஒழுங்குறுத்தல் பணிகள்<br>17. பொதுமக்கள் கூட்டாதன சீர்திருத்தமும் வினைத்திறமை மற்றும் துரிதமான முறையில் வீடுகளின் உடைமையைக் கையளித்தல்<br>18. தாழ்நிலங்களை நிரப்புதல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்<br>19. நகரப் பிரதேசங்களில் அமைந்துள்ள சேவைகள் மற்றும் வசதிகள் குறைந்த பிரதேசங்கள் | | |

| | | |
|---|---|---|
| மற்றும் சதுப்பு நிலைங்களைப் பொதுத் திட்டமொன்றுக்கமைய அபிவிருத்தி செய்வதற்கு புதிய வழியாட்டல்<br>20. அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் ஏனைய கட்டிடங்களுக்காகத் தரவளவுகள் மற்றும் பெறுமானங்களை விதித்தல்<br>21. குறைந்த வருமானம் பெறுநர்கள் மற்றும் விசேட சமுதாயக் குழுக்கள் அடங்கலான பொதுமக்களின் வீடமைப்புத் தேவைகயைப் பூர்த்தி செய்வதற்காக வீடமைப்புத் திட்டங்களையும் வீடமைப்பு நிதியுதவி நிகழ்ச்சித்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துதல்.<br>22. சூழல்நேயமிக்கதாக செலவுக்கேற்ற நலன்களைப் பெற்றுத்தரும் வீடமைப்பு தொழில்நுட்ப முறைபற்றி கிராமிய மக்களுக்கு வழிகாட்டுதல்.<br>23. அரசாங்க நிறுவனங்களுக்கு இயந்திரமயப் பொறியியில் சேவைகளை வழங்குதல்.<br>24. தொடர்புடைய சட்டதிட்டங்கள் மற்றும் தரவளவுகளுக்கமைய நிர்மாணக் கைத்தொழில்துறையின் பணிகளை ஒழுங்குறுத்துதலும் பதிவுசெய்தலும் விதிமுறைப்படுத்தலும் தரப்படுத்துதலும்<br>25. நிர்மாணக் கைத்தொழிலுக்குரிய | | |

| | | |
|---|---|---|
| ஆலோசனை மற்றும் ஒழுங்குறுத்தல் சேவைகளை வழங்குதல்<br>26. கனரக நிர்மாணத்துறை உபகரணங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பற்றிய பயிற்சி.<br>27. நீக்கப்பட்டுள்ளது.<br>28. கட்டிடப் பொருட்கள் கைத்தொழிலை மேம்படுத்துதல்<br>29. உள்நாட்டு நிர்மாணக் கலைஞர்களை ஊக்குவித்தல்<br>30. உள்நாட்டு சிறிய மற்றும் மத்தியதர துணை ஒப்பந்தக்காரர்களை வலுவூட்டுதலும் பாதுகாப்பு வழங்குதலும்<br>31. சமுத்திர மாசுபடல் நிவாரண நடவடிக்கைகள்<br>32. சமுத்திர மற்றும் சமுத்திரம் சார்ந்த மாசுபடலைத் தடுப்பதற்குக செயலாக்கத் திட்டமொன்றைத் தயாரித்தலும் செயற்படுத்துதலும்<br>33. கடலோரப் பேணல் மற்றும் பாதுகாப்பு<br>34. கழிவுப்பொருட்கள் அகற்றுவதன் காரணமாக கடற்பரப்பு மற்றும் கடற்படுக்கைக்கு ஏற்பட்டுள்ள சேதங்களைத் தவிர்ப்பதற்காக சமுத்திர துப்புரவேற்பாட்டு வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துதல்<br>35. அரசாங்கத்தின் மற்றும் தனியார் பெருந்தோட்டக் கம்பனிகளில் சேவையாற்றும் காணிகளற்ற மக்களுக்காக வீடு வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் புதிய | | |

| | | |
|---|---|---|
| கிராமங்கள் மற்றும் நகரங்களை உருவாக்குதல்.<br>36. தோட்டப் பிரிவின் சமூகங்களைப் பொருளாதாரச் சமூக மற்றும் கலாசார ரீதியில் வலுவூட்டுவதற்காக அடிப்படை வசதிகள், வாழ்வாதார உற்பத்திகள் மற்றும் சமூக அபிவிருத்திக் கருத்திட்டங்கள் உள்ளிட்ட ஏனைய தேவைகளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்<br>37. கிராமிய தோட்டப் பிரிவுகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.<br>38. பெருந்தோட்டச் சமுதாயம்சார்ந்த சமூகத் தலைவர்கள் மற்றும் மக்களின் கலந்து கொள்ளலுடனான "சமுதாய அடிப்படையிலான சபைகளும் சமூக அடிப்படையிலான நிறுவனங்களும்" தாபித்தல்<br>39. பெருந்தோட்ட மக்களின் பிள்ளைகளுக்காக ஆரம்பக் கல்வி, சுகாதார வசதிகளை உறுதிப்படுத்தலுக்கான விசேட வேலைத்திட்டமொன்றை வகுத்தல்<br>40. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்குரிய | | |

| | | |
|---|---|---|
| பணிகளும்<br>41. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களையும் கண்காணித்தல் | | |

**21.வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்**

| **நிரல்** I | **நிரல்** II | **நிரல்** III |
|---|---|---|
| **கடமைகளும் பணிகளும்** | **திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்** |
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட வெளிநாட்டலுவல்கள் விடயத்துடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப் படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைத்தல்<br>4. வெளிநாடுகளில் இலங்கையின் பிரதிமையை | 1. வெளிநாடுகளிலுள்ள தூதராண்மைக் குழுக்கள்<br>2. தேசியக் கடல்சார் நடவடிக்கைச் செயற்குழுச் செயலகம்<br>3. லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் திறமுறை கற்கை நிறுவனம் | • (1981ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க) கொன்சல் காவற்தூதுப் பணிகள் சட்டம்<br>• (1996ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க) இராசதந்திர சிறப்புரிமைகள் சட்டம்<br>• (2000 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க) உபாயமுறைகளைக் கற்றாராய்தல் தொடர்பான இலங்கை நிறுவனச் சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப் பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும் |

| | | |
|---|---|---|
| உயர்த்துவதன்மூலம் இலங்கைக்கு உச்சக்கட்ட சர்வதேச ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ளக் கூடியதாக வெளிநாடுகளுடன் இராஜதந்திர உறவுகளைப் பேணுதல்.<br>5. சர்வதேச ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்காகத் தேசியக் கொள்கைகளுக்கமையத் தேவையான பணிகளை நிறைவேற்றுதல், இணைப்பாக்கம் செய்தல் மற்றும் அரசுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.<br>6. இலங்கையின் நற்பெயருக்கு ஏற்படும் பாதகமான பிரசாரங்கள் தொடர்பாக உரிய பதிலளித்தல் மற்றும் இலங்கையின் பிரதிமையை உறுதிப்படுத்தல்<br>7. சர்வதேச மற்றும் பிராந்திய அரசியல், பொருளாதார, சுற்றாடல், சமூக மற்றும் கலாசார ஒத்துழைப்பு அமைப்புகளுடன் முனைப்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்<br>8. வெளிநாடுகளுடன் தூதராண்மை உறவுகளைப் பேணுதலும் சட்டவாக்கங்கள், உடன்படிக்கைகள் மற்றும் சமவாயங்கள் குறித்த கலந்துரையாடல்களும்<br>9. அரச தூதராண்மைக் காப்புரிமைகளையும் சிறப்புரிமைகளையும் பெற்றுக்கொடுத்தல்<br>10. வெளிநாட்டு வர்த்தகத்தையும், முதலீடுகள், தொழில்வாய்ப்புகள், வெளிநாட்டு நிதி தொடர்புகள் நடவடிக்கைகளையும் மேம்படுத்துவதற்காக உரிய அமைச்சுககள் மற்றும் நிறுவனங்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கதல்<br>11. இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் சமுத்திர உரிமையைப் | | |

| | | |
|---|---|---|
| பாதுகாப்பதற்காக தேவையான வெளிநாட்டு உறவுகளை உறுதிசெய்தல்<br>12. வெளிநாடுகளில் வாழுகின்ற இலங்கையர்களின் நலனோம்புகைக்காக வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்<br>13. கொன்சியூலர் சேவைகளை வழங்குதல்.<br>14. இலங்கை வெளிநாட்டு சேவை மற்றும் வெளிநாட்டு தூதராண்மைச் சபைகளுக்கு இணைப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்களின் நிருவாக மற்றும் தொழில்வாண்மை இயலளவினை அதிகரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தல்<br>15. புவியியல்ரீதியான அரசியல் போக்குகளை கற்றாராய்ந்து இலங்கைக்குச் சாதகமான விதத்தில் அந்தப் போக்குகளை முகாமைசெய்வதற்கு வேண்டிய உபாயமுறைகள் பற்றி அரசுக்கு ஆலோசனை வழங்குதல்<br>16. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்கான நடவடிக்கைகளும்<br>17. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களையும் கண்காணித்தல் | | |

## 22. புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| **கடமைகளும் பணிகளும்** | **திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்** |

| | | |
|---|---|---|
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பற்றிய விடயங்களுடனும் மற்றும் 11 ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களுடனும் தொடர்பான விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயாரித்தலும், நடைமுறைப்படுத்தலும், தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைப்புச் செய்தல்<br>4. பௌத்த மதம் உட்பட எனைய மதங்களைப் பின்பற்றுவதற்கான உரிமையைப் பாதுகாத்தல்<br>5. சகல சமயங்களுக்கும் வழங்கப்படும் உரிமையைப் பாதுகாத்தல் மற்றும் மதத் தீவிரவாதத்துக்கு எதிராகச் செயற்படல் | 1. பௌத்த அலுவல்கள் திணைக்களம்<br>2. இந்து மத, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்<br>3. கிறித்தவ மத அலுவல்கள் திணைக்களம்<br>4. முஸ்லிம் சமய அலுவல்கள் திணைக்களம்<br>5. தேசிய நூதனசாலைத் திணைக்களம்<br>6. தேசிய சுவடிக்காப்புத் திணைக்களம்<br>7. நீக்கப்பட்டுள்ளது.<br>8. நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்<br>9. மத்திய கலாசார நிதியம்<br>10.புத்தசாசன நிதியம்<br>11.பௌத்த மறுமலர்ச்சி நிதியம்<br>12. கலாசார அலுவல்கள் திணைக்களம்<br>13.தொல்பொருள் திணைக்களம்<br>14.டவர்ஹோல் மண்டப தியேட்டர் மன்றம்<br>15. தேசிய கலை மன்றம்<br>16. கிராமோதய ஜனகலா கேந்திரய<br>17. காலி மரபுரிமை மன்றம்<br>18. தேசிய நுண்கலைகள் நிலையம் (நெலும் பொக்குண)<br>19. அபே கம<br>20. அமரதேவ அழகியல் மற்றும் ஆராய்ச்சி நிலையம் | • (1990ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க) புத்த சாசன நிதியச் சட்டம்<br>• (1931 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) பௌத்த அறநிலையங்கள் கட்டளைச் சட்டம்<br>• (1985ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க)இந்து பண்பாட்டு நிதியச் சட்டம்<br>• (1956ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க) பள்ளிவாசல் மற்றும் முஸ்லிம் தரும நம்பிக்கைப் பொறுப்புகள் அல்லது வக்பு சட்டம்<br>• நீக்கப்பட்டது<br>• (1973 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க) தேசிய சுவடிக் காப்புச் சட்டம்<br>• (1980ஆம் ஆண்டின் 57ஆம் இலக்க) மத்திய கலாசார நிதியச் சட்டம்<br>• (1922 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க) நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டம்<br>• (1988 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க) கலாசார சொத்துக்கள் சட்டம்<br>• (1952 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) இலங்கை கலை மன்றச் சட்டம்<br>• (1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க) தொல் பொருளியல் கட்டளைச் சட்டம்<br>• (1978 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க) டவர் மண்டப அரங்கு நிதியச் சட்டம்<br>• (1098 ஆம் ஆண்டின 62 ஆம் இலக்க) சீகிரி மரபுரிமை மன்றம்<br>• (1994 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) காலி உரிமை மன்றம்<br>• (2018 ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க) அமரதேவ அழகியல் மற்றும் |

| | | |
|---|---|---|
| 6. அறநெறிப் பாடசாலைக் கல்வியை மேம்படுத்துவதற்குரிய வசதிகளை அளித்தல்<br>7. புனிதபூமி திட்டமிடுதலும் அபிவிருத்தி செய்தலும்<br>8. பௌத்த சாசனத்தை பாதுகாத்து, போசிப்பதற்காக உகந்த நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் உரிய நிறுவனங்கள்மூலம் செயற்படுத்துதலும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்<br>9. இந்து மத, பண்பாட்டு அலுவல்கள் தொடர்பிலான நிகழ்ச்சித்திட்டங்களின் செயற்படுத்துகையும் கண்காணிப்பும்<br>10. கிறித்தவ மத அலுவல்கள் தொடர்பிலான நிகழ்ச்சித்திட்டங்களின் செயற்படுத்துகையும் கண்காணிப்பும்<br>11. இஸ்லாம் மத அலுவல்கள்தொடர்பிலான நிகழ்ச்சித்திட்டங்களின் செயற்படுத்துகையும் கண்காணிப்பும்<br>12. பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள வணக்கத் தலங்களை அபிவிருததி செயதல்<br>13. சகல சமயங்களுக்குரிய டிஜிட்டல் தொல்பொருள் சொற்களஞ்சியமான்றைத் தயாரித்தல்<br>14. அரசாங்க ஆவணங்களை விதிமுறையாக முகாமை செய்தலும் பாதுகாத்தலும்<br>15. மத்திய கலாசார நிதியத்தின் நிருவாகமும் அது தொடர்பாக ஆராய்ந்து மீள்ஒழுங்கமைக்க நடவடிக்கை எடுத்தல்<br>16. இலங்கையின் தேசிய கலாசாரத்தின் எல்லா அம்சங்களையும் முன்னேற்றுவதற்காக | | ஆராய்ச்சி நிலையச் சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

| | | |
|---|---|---|
| நடவடிக்கை எடுத்தல்.<br>17. வெளிநாடுகளுடன் கலாசார உறவுகளை மேற்கொள்ளுதல்<br>18. கலாசார மற்றும் தொல்பொருளியல் மரபுரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகளின் பெருமை பிரபல்யமாகும் சுற்றுலா நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்குதல்.<br>19. இனங்களுக்கிடையில் ஒத்தழைப்பை ஏற்படுத்தும் வகையில் கலாசார ரீதியியலான பங்களிப்பை பயன்படுத்தும் போக்கை இனமறிதலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தலும்.<br>20. வரலாற்றுரீதியான தொல்பொருளியல் மற்றும் கலாசார மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.<br>21. நவீன அத்துடன் சம்பிரதாயரீதியிலான கலை ஆக்கங்களை மேம்படுத்துவதற்கும் கலைஞர்களை ஊக்குவிப்பதற்குமுரிய நடவடிக்கைகளை எடுத்தல்.<br>22. நாடக, சங்கீத மற்றும் நடனத்துறைகளின் மேம்பாட்டுக்கான செயல்நெறிகளை இனமறிதலும் நடைமுறைப்படுத்துதலும்<br>23. சர்வதேச சமவாயங்களுக்கமைய ஆக்க உரிமை செலுத்துதல் தொடர்பாகத் | | |

| | | |
|---|---|---|
| திறமுறையொன்றை அறிமுகம்செய்தல்<br>24. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்குரிய பணிகளும்<br>25. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களையும் கண்காணித்தல் | | |

**23. மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| **கடமைகளும் பணிகளும்** | **திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்** |
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட மின்சக்தி மற்றும் வலுசக்தி தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>3. வீண்விரயம் மற்றும் ஊழலை | 1. இலங்கை மின்சார சபையும் அதன் துணைக் கம்பனிகளும்<br>2. இலங்கை மின்சாரக் கம்பனி<br>3. வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனி<br>4. வரையறுக்கப்பட்ட எல்ரீஎல் ஹோல்டிங் (தனியார்) கம்பனி<br>5. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்<br>6. வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் களஞ்சியத் தொகுதி<br>7. இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை<br>8. வரையறுக்கப்பட்ட பொலிப்ரோ லங்கா (தனியார்) கம்பனி<br>9. இலங்கை நிலைபெறுதகு வலுசக்தி அதிகாரசபை<br>10. இலங்கை அணுசக்தி சபை<br>11. இலங்கை அணுசக்தி ஒழுங்குறுத்துகைச் சபை | • (1969 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க) இலங்கை மின்சாரசபைச் சட்டம<br>• (2009ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க) இலங்கை மின்சாரச் சட்டம்<br>• (1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்<br>• (2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க) பெற்றோலிய வளங்கள் சட்டம்<br>• (2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க)இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை சட்டம்<br>• (2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க)இலங்கை அணுசக்தி சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் |

| | | |
|---|---|---|
| ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைத்தல்<br>4. சூரிய, நீர், அனல், நிலக்கரி, கழிவுப்பொருட்கள் மற்றும் காற்று ஆகிய மூலவளங்களின்மூலம் மின்சக்தி மற்றும் ஏனைய எரிசக்தி உற்பத்தி செய்தல் தொடர்பான அலுவல்கள் மீதான ஆராய்வும், திட்டமிடலும் கண்காணிப்பும் அபிவிருத்தியும்<br>5. இலங்கையின் மின்சாரத் தேவையை நிவர்த்திசெய்தல் மற்றும் வலுசக்தியின் பாதுகாப்பு<br>6. வலுசக்தியை வினைத்திறனாகும் வகையில் ஏற்படும் கேள்விகளை முகாமைத்துவம் செய்தல்<br>7. நீண்டகாலத் தேவையினை அடிப்படையாகக்கொண்ட புதுப்பிக்கத்தக்க மின்உற்பத்தித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்<br>8. மின் சேகரிப்பு மற்றும் விநியோகிக்கும் செயற்பாட்டினை வினைத்திறனாக்குதல்<br>9. உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியை உயர்ந்தமட்டத்திலான வினைத்திறனுடன் பாவிப்பதை உறுதிப்படுத்துவதற்காக முறையான கட்டமைப்பொன்றை நிர்மாணித்தல்<br>10. மின் உற்பத்திக்காக செலவிடப்படும் செலவினைக் குறைப்பதறகாக உற்பத்தியின்போது ஏற்படும் நிச்சயமறற தன்மையை அகற்றுதல்<br>11. பச்சைவீட்டு வாயு வெளியேற்றுதலைக் | | இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப் பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும் |

| | | |
|---|---|---|
| கட்டுப்படுத்தல்<br>12. கிராமிய மின்வலுப்படுத்துகை<br>13. பெற்றோலியம்சார்ந்த உற்பத்திகள், இயற்கை வாயு என்பனவற்றின் இறக்குமதி, சுத்திகரிப்பு, களஞ்சியப்படுத்தல், விநியோகம் மற்றும் விற்பனை<br>14. பெற்றோலிய உற்பத்தியும் சுத்திகரிப்புத் தொடர்பான பணிகளும்<br><br>15. பெற்றோலிய வளம் மற்றும் இயற்கைவாயு ஆய்வும் அதுசார்ந்த விடயங்களும்<br>16. பெற்றோலிய உற்பத்திகள் முதலிய வளமூலங்களிலிருந்து எரிவாயு மற்றும் இடை உற்பத்தி நடவடிக்கைகள், மொத்த வைப்பு, உற்பத்தி மற்றும் விநியோகம்<br>17. எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம் சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி<br>18. வலுசக்தி வளமூலங்களின் கட்டுப்பாடு, ஒழுங்குறுத்துகை, பயன்பாடு ஆகியவற்றுக்குத் தகுந்த மின்வலுக் கொள்கையொன்றை வகுத்தமைத்தல<br>19. புதுப்பிக்கத்தக்க மின்சக்தியை அபிவிருத்தி செய்தல்<br>20. வீடுகள், அலுவலகங்கள், மற்றும் தொழில்சாலைகளுக்கு குறைந் செலவில் மின்சாரம் வழங்குவதை உறுதிப்படுத்தவுதற்கு சூரிய சக்தி கட்டமைப்புகள் மற்றும் சூரிய கலன்கள் கட்டமைப்புகளைப் பாவிப்பதை ஊக்குவித்தல்<br>21. புதுப்பிக்கத்தக்க வலுசக்திக் கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு தனியார்துறை மற்றும் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிதல்<br>22. தொழில்நுட்பக் கழிவுப்பொருட்களைப | | |

| | | |
|---|---|---|
| பாவித்து வலுசக்தி உற்பத்தியை உயர்த்துதல்<br>23. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்குரிய பணிகளும்<br>24. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களையும் கண்காணித்தல் | | |

**24.சுற்றாடல் அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| **கடமைகளும் பணிகளும்** | **திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்** |
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட சுற்றாடல்பற்றிய விடயத்துடனும் மற்றும் 11 ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களுடனும் தொடர்பான விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயாரித்தலும், நடைமுறைப்படுத்தலும், தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள் சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு | 1. மத்திய சுற்றாடல் அதிகாரசபை<br>2. புவிச் சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகம்<br>3. வரையறுக்கப்பட்ட (GSMB) தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) கம்பனி<br>4. இலங்கை கிளைமேட் பன்ட் (பிறைவேட்) லிமிட்டெட் | • (1992ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க) சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டம்<br>• (1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க) தேசிய சூழல் சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

| | | |
|---|---|---|
| நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைப்புச் செய்தல்,<br>4. சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமை பற்றிய கொள்கைகளையும் திட்டங்களையும் வகுத்தமைத்தல்<br>5. தற்கால மற்றும் எதிர்கால சந்ததியினருக்காக சுற்றாடலை பாதுகாப்பதற்காக தேசிய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை வளர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்<br>6. சுற்றாடல் மாசுபடுதலைத் தடுப்பதற்காகத் திட்டமிடுதலும் செயற்படுத்துதலும்<br>7. சுற்றாடல் மாற்றங்கள் மற்றும் காபன் பயன்பாடு குறைந்த பொருளாதாரமொன்றினைக் கொண்ட நிலைபேறான அபிவிருத்தியொன்றினை ஏற்படுத்துவதற்காகச் சட்டம் மற்றும் உபாய வழிமுறைகளை உருவாக்குதலும் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதலும்<br>8. நிலைபேறான சுற்றாடல் எனும் எண்ணக்கருவிலுள்ள முக்கியத்துவம் பற்றி மக்களுக்கு உளப்பாங்கு ரீதியான விருத்தியை ஏற்படுத்துதல்<br>9. சுற்றாடல் சாத்தியக்கூறு தொடர்பான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் அச்செயற்பாட்டை மீளாய்வுசெய்தல்<br>10. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு | | |

| | | |
|---|---|---|
| ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்குரிய பணிகளும்<br>11. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**25.விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| **கடமைகளும் பணிகளும்** | **திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்** |
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட விளையட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் பற்றிய விடயங்களுடனும் மற்றும் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களுடனும் தொடர்பான விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயாரித்தலும், நடைமுறைப்படுத்தலும், தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ | 1. விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம்<br>2. தேசிய விளையாட்டுத்துறை மன்றம்<br>3. தேசிய விளையாட்டுக் கல்லூரி<br>4. சுகததாச தேசிய விளையாட்டு தொகுதி அதிகாரசபை<br>5. விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகம்<br>6. இலங்கையின் ஊக்கமருந்துப் பொருட்களைத் தடுப்பதற்கான முகவராண்மை நிறுவனம்<br>7. தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றம்<br>8. தேசிய இளைஞர் படையணி<br>9. வரையறுக்கப்பட்ட தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவு<br>10. தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையம் | • (2019 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) விளையாட்டுகள் தொடர்பிலான தவறுகளைத் தடுக்கும் சட்டம்<br>• 1973ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க) தேசிய அரசப் பேரவையின் விளையாட்டுத் துறைச் சட்டம்<br>• (1999ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க) சுகததாச தேசிய விளையாட்டுத்துறை கட்டிடத் தொகுதி அதிகாரசபைச் சட்டம்<br>• (2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) விளையாட்டு நடவடிக்கைகளின்போது ஊக்கமருந்துப் பொருட்களைப் பயன்படுத்துவதற்கு எதிரான இணக்கப்பாட்டுச் சட்டம்<br>• (1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க) தேசிய இளைஞர் சேவை மன்றச் சட்டம்<br>• (2002 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க) இளைஞர் படையணிச் சட்டம்<br>• (1939 ஆம் ஆண்டின் 48 |

| | | |
|---|---|---|
| முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைப்புச் செய்தல்,<br>4. இலங்கையில் விளையாட்டுத்துறையை வலுவூட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்<br>5. விளையாட்டுத்துறையில் எதிர்பார்க்கப்படும் அடைவுகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் பாராட்டுக்களை வழங்குதல்<br>6. விளையாட்டுத்துறைக் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல்<br>7. இலங்கை பற்றிய பிரதிமையை சர்வதேச ரீதியிலே கட்டியெழுப்புவதற்காக விளையாட்டுத்துறையினை பயன்படுத்தக் கூடியவாறான புதிய திறமுறைகளை வகுத்தமைத்தலும் உரிய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தலும்<br>8. வீர, வீராங்கனைகள் சர்வதேச போட்டிகளுக்கு பங்குபற்றுவதற்கான வாய்ப்புகளை வரிவுபடுத்துதல்<br>9. பொதுமக்களுடைய தேகாரோக்கிய நலனை ஏற்படுத்துவதற்கு அவசியமான வசதிகளை ஊக்குவித்தலும் கூட்டிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும்<br>10. விளையாட்டு மருத்துவ வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் விளையாட்டு நடவடிக்கைகளின்போது தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து பயன்பாட்டினைத் தவிர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்<br>11. விளையாட்டுக் கட்டிடத் தொகுதிகளை அபிவிருத்தி செய்தலும் முகாமை செய்தலும்<br>12. விளையாட்டுச் சங்கங்கள், அமைப்புக்கள் விளையாட்டுப் | | ஆம் இலக்க) சிறுவர்கள் மற்றும் இளம்ஆட்கள் பற்றிய கட்டளைச் சட்டம்<br>• (1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க) தேசிய அரச சபை விளையட்டுச் சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையும ான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

| | | |
|---|---|---|
| போட்டிகளில் பங்குகொள்ளக் கூடியதாக ஊக்குவித்தல்<br>13. இளம்சந்ததியினரின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்திசெய்யும் தேசிய நிகழ்ச்சித்திட்டஙங்களை இலக்காகக்கொண்ட உளவிருத்திச் செயற்றிட்டங்களை உருவாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்தல்<br>14. இளம் சமூகத்தினரை மையப்படுத்திய சர்வதேச ஒத்துழைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்<br>15. தொழில்வாய்ப்பற்ற இளைஞர்களை மையமாகக்கொண்ட ஆக்கத்திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்<br>16. இளைஞர் அமைப்புகள் தொடர்பான ஒழுங்குபடுத்தலும், அபிவிருத்தி நடவடிக்கைகளும்<br>17. இளம்வயதிலான தொழில்தேர்ச்சி, தொழில்திறமைகள், ஆக்கபூர்வமான திறமைகள் என்பவற்றுக்குச் சமூக அங்கீகாரம் கிடைக்கும் வகையில் அவர்களுக்குத் தமது ஆற்றல்களை மேம்படுத்திக் கொள்ளக்கூடிய வகையிலான இளைஞர் சமுதாயத்தை இலக்காகக்கொண்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல்<br>18. உள்நாட்டு வெளிநாட்டு தொழில்வாய்ப்புகளுக்காக பொருத்தமான வகையில் இளைஞர் மனிதவள வங்கியொன்றை ஆரம்பித்தல்<br>18. இளம் தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவுதற்கு நடவடிக்கை எடுத்தலும் அவர்களுக்குத் தேவையான ஊக்குவிப்பையும் புதிய சந்தர்ப்பங்களையும் | | |

| | | |
|---|---|---|
| வழங்குவதற்காக முறைமையொன்றை அறிமுகப்படுத்திச் செயற்படுத்துதல்<br>20. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்குரிய பணிகளும்<br>21. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**26. நீர்ப்பாசன அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| **கடமைகளும் பணிகளும்** | **திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்** |
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட நீர்ப்பாசனம் தொடர்பிலான விடயத்துடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள சேவைகளை | 1. நீர்ப்பாசனத் திணைக்களம்<br>2. உமாஓய, மொரகஹகந்த, களுகங்கை, கிங் நில்வளா, மல்வத்து ஓயா உள்ளிட்ட ஏனைய பிரதான நீர்ப்பாசன அபிவிருத்திக் கருத்திட்டங்கள்<br>3. பொறியியல் அலுவல்கள் பற்றிய மத்திய ஆலோசனைப் பணியகம் மற்றும் அதன் துணைக் கம்பனிகளும் இணைக் கம்பனிகளும்<br>4. இலங்கை மகாவலி அதிகாரசபை<br>5. இலங்கை பொறியியலாளர்களின் சபை | • (1946ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க) நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டம்<br>• (1924 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) வெள்ளப்பெருக்கு பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்<br>• (1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க) அரச தொழில்நுட்பக் கூட்டுத்தாபனச் சட்டம்<br>• (1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டம்<br>• (2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) இலங்கை பெறியியலாளர்களின் சபைச் சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் |

| | | |
|---|---|---|
| வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைத்தல்<br>4. இலங்கையில் நீர்ப்பாசனத் தொழிலை அபிவிருத்தித் செய்தல்<br>5. நீர்ப்பாசன மற்றும் வடிகாலமைப்பு முறைமைகளை நிர்மாணித்தல் மற்றும் முறையாகப் பராமரிப்பதன்மூலம் கமத்தொழிலுக்குத் தேவையான நீர் விநியோகத்தை ஒழுங்கக வழங்குதல்<br>6. வெள்ளப் பெருக்குக் கட்டுப்பாட்டுத் திட்டங்களினால் வடிகாலமைப்பு மற்றும் வெள்ளப்பெருக்கினைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள்<br>7. கமத்தொழில் அபிவிருத்திக்கு முன்னுரிமையளித்து கொள்கை ரீதியாக மின்சாரம் மற்றும் குடிநீரை வழங்குவதற்குத் தேவையான நீர்த்தேக்கம் மற்றும் நீர்ப்பாசன வசதிகளைப் போதியளவில் வழங்கக்கூடியவாறு முகாமைத்துவ முறையினைப் பேணுதல்<br>8. நீர் ஆற்றுப்படுக்கைப் பகுதிகள் மற்றும் ஆற்றுப் பள்ளத்தாக்குப் பகுதிகளைத் திட்டவட்டமாக நிர்ணயித்து | | இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

| | | |
|---|---|---|
| அவற்றை நிலைபேறன வகையில் பேணுவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் தேவையான வழிகளை வகுத்தல்<br>9. கங்கைகள், கால்வாய்கள், அருவிகள் மற்றும் குளங்கள் முதலிய நீர் ஊற்றுக்கள் சார்ந்த சூழல் மாசடைவதைத் தவிர்த்தல்<br>10. நீர் மாசடைவதை கட்டுப்படுத்தலும் நீரின் பண்புத்தரத்தைப் பாதுகாப்பதற்குமான உபாயமுறைகளைத் தயாரித்தலும்<br>11. நீர்ப்பாசன அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல்<br>12. அணைகள் பாதுகாப்பு ஏற்பாடுகளை ஏற்படுத்துதல்<br>13. உவர்நீரை அகற்றுவதற்கான திட்டங்களைச் செயற்படுத்தல்<br>14. நிலக்கீழ் நீர் ஊற்றுக்களைப் பேணுவதற்கான மற்றும் மழைநீரைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தமைத்தல்<br>15. மகாவலி வலயங்களில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல் மற்றும் காணிகள் தொடர்பான அலுவல்கள்<br>16. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்கான நடவடிக்கைகளும்<br>17. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களையும் | | |

| | | |
|---|---|---|
| கண்காணித்தல் | | |

27. தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| **கடமைகளும் பணிகளும்** | **திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்** |
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பற்றிய விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி | 1. தொழில் திணைக்களம்<br>2. தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்<br>3. தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்<br>4. தொழிலாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம்<br>5. தேசிய உற்பத்தித்திறன் செயலகம்<br>6. சிரம வாசனா நிதியம்<br>7. மனிதவலு மற்றும் தொழில்வாய்ப்பு திணைக்களம்<br>8. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்<br>9. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மை (தனியார் கம்பனி) | • (1979 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க) ஊழியர் சபைச் சட்டம்<br>• (1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) ஊழியர் சேமலாப நிதிச் சட்டம்<br>• (1956ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க) பெண்களையும் இளம் ஆட்களையும் சிறுவர்களையும் வேலைக்கமர்த்துதல் சட்டம்<br>• (1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க) தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம்<br>• (1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க)கைத்தொழிற் பிணக்குகள் சட்டம்<br>• (1939 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க)பிரசவ நலன்கள் கட்டளைச் சட்டம்<br>• (2009ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க) தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய தேசிய நிறுவகச் சட்டம்<br>• (1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க)பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டம்<br>• (1954 ஆம் ஆண்டின் 19 |

| | | |
|---|---|---|
| அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப் படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைத்தல்<br>4. சர்வதேச தரங்களுக்கு ஏற்ப தொழிலாளர் உறவுகள், தரங்கள் ஊழியர் நிர்வாகம், நலனோம்புகை மற்றும் சுகாதாரம் தொடர்பான கொள்கைகளைத் தயாரித்தல் மற்றும் செயற்படுத்துதல்<br>5. சர்வதேச தொழிலாளர் அமைப்பாண்மை, சர்வதேச சமூகப் பாதுகாப்பு அமைப்பாண்மை ஆகியவற்றுடன் ஒத்துழைப்பை பேணுதல்<br>6. ஊழியர் சேமலாப நிதியம், தனியார் சேமலாப நிதியம் மற்றும் தனியார் ஓய்வுறுத்தல் திட்டத்தின் நிருவாகம் மற்றும் ஒழுங்குறுத்துகை நடவடிக்கைகள்<br>7. தொழில்நுட்ப உறவுகளும் கைத்தொழில் பிணக்குகளைத் தீர்த்தலும்<br>8. தொழில் உறவுகளுக்குரிய சட்டதிட்டங்களைத் தயாரித்தலும் ஒழுங்குறுத்துகை நடவடிக்கைகளும்<br>9. தொழிற்சங்கங்களைப் பதிவு செய்தலும் அரச மற்றும் தனியார் பிரிவுகளின் அனைத்துத் | | ஆம் இலக்க)சாப்புகள் மற்றும் அலுவலக ஊழியர் (தொழிலையும் வேதனத்தையும்) விதிமுறைப்படுத்தல் சட்டம்<br>• (1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க) தொழிலாளிகளின் தொழிலை முடிவுறுத்துதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்<br>• (1935 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) தொழிற் சங்கங்கள் கட்டளைச் சட்டம்<br>• (1941ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க) சம்பள நிர்ணய சபைகள் கட்டளைச் சட்டம்<br>• (1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க)தொழிலாளர் நட்டஈட்டுச் கட்டளைச் சட்டம்<br>• (1998ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க) சிரம வாசனா நிதியச் சட்டம்<br>• (1985ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டம்<br>• (1956 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க) கட்டணங்களை அறவிடும் முகவராண்மைகள் சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

| | | |
|---|---|---|
| தொழிற்சங்கங்களதும் அலுவல்களை நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தும்பொருட்டுத் தேவையான சாதகமான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதலும் முறைப்படுத்தலும்<br>10. தேசிய உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான கொள்கை நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல்<br>11. தேசிய மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கைகளைச் செயற்படுத்துதல்<br>12. வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை அதிகரித்தல், மேம்படுத்தல் மற்றும் குறித்த தொழில்களுக்குத் தேவையான திறன்னளை மேம்படுத்துவதற்காக தொடர்புடைய நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுதல்<br>13. வெளிநாட்டில் பணியாற்றும் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்குத் தேவையான சட்டத்தையும கட்டுப்பாட்டு முறைகளையும் அறிமுகப்படுத்துதல்<br>14. வெளிநாட்டுக்கு வேலைவாய்ப்புப்பெற்றுச் செல்லும் ஊழியர்கள் மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு அந்நியச் செலாவணியை இலங்கைக்குள் சேமிப்பதற்கும் முதலீடு செய்வதற்கும் விசேட வசதிகளை வழங்குதல்<br>15. வெளிநாடுகளில் வேலைசெய்துவிட்டு நாட்டுக்குத் திரும்பும் ஆட்களுக்கு தெழிலென்றை ஆரம்பிப்பதற்கு விசேட நிகழ்ச்சித்திட்டமொன்றைச் | | |

| | | |
|---|---|---|
| செயற்படுத்துதல்<br>16. மத்தியகிழக்கு மற்றும் ஏனைய நாடுகளில் வேலைசெய்யும் வீட்டுப்பணிப் பெண்களின் பாதுகாப்பு மற்றும் நலனேம்புகையை உறுதிசெய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல்<br>16. புலம்பெயர் ஊழியர்களின் தொழில்சார் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கலும் நலனோம்புகையைப் பேணலும்<br>18. வெளிநாடுகளில் விபத்துக்களுக்கு உட்படுவோர் நட்டஈட்டைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகளை வலுவூட்டுவதற்குத் தேவையான சட்டரீதியான மறுசீரமைப்புகளை அறிமுகப்படுத்துதல்<br>19. தொழில் முகவர் நிறுவனங்களின் ஒழுங்குறுத்துகை<br>20. தொழில் நிறுவனங்களினால் கட்டணங்கள் அறவிடப்படுவதை ஒழுங்குறுத்தல்<br>21. வெளிநாட்டுத் தொழில்களுக்காக தொழில்சார் வழிகாட்டிகளை வழங்குதலும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களினால் வழங்கப்படும் வெளிநாட்டுத் தொழில்களில் ஈடுபடுவோரின் நலனோம்புகையை உறுதிப்படுத்தும் வகையில் செயற்படுதல்<br>22. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்குரிய | | |

| | | |
|---|---|---|
| பணிகளும்<br>23. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களையும் கண்காணித்தல் | | |

**28. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| **கடமைகளும் பணிகளும்** | **திணைக்களங்களும் நியதிச்சட்டநிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்** |
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட பொதுமக்கள் பாதுகாப்பு விடயத்துடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2.அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை | 1. இலங்கை பொலிஸ்<br>2. தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனம்<br>3. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகம் | • ((1865 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க) பொலிஸ் கட்டளைச் சட்டம்<br>• (2011 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க) தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனச் சட்டம்<br>• (1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) தொண்டர் சமூகசேவைகள் அமைப்பு(பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வை) சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

| | | |
|---|---|---|
| உறுதிப் படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைத்தல்<br>4. சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுதல்<br>5. சமூக ஒழுக்கத்தை உறுதிப்படுத்தும் விரிவான சீர்திருத்தங்கள் உள்ளடங்கிய உபாயமார்க்கங்களை நடைமுறைப்படுத்துதல்<br>6. சமூகச் சீரழிவாக மாறியுள்ள பல்வேறான குற்றங்கள் மற்றும் சமூக விரோத செயற்பாடுகளைத் தடுப்பதற்கும் தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல்<br>7. வாகனப் போக்குவரத்துக் கட்டுப்பாடு<br>8. மக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும், மக்களுடன் நெருங்கி பொலிஸ் சேவையின் சேவை மட்டத்தை உயர்த்துவதற்கும் தேவையான மறுசீரமைப்பை மேற்கொள்ளல்<br>9. தேசியக் கொள்கைச் சட்டகத்தினுள் அரச சார்பற்ற அமைப்புகளின் பணிகளைக் கூட்டிணைத்து நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக பங்களிப்புச் செய்வதற்குச் சந்தர்ப்பத்தை வழங்குதல்<br>10. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல | | |

| | | |
|---|---|---|
| விடயங்களுக்கான நடவடிக்கைகளும்<br>11. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களையும் கண்காணித்தல் | | |

**29. வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| **கடமைகளும் பணிகளும்** | **திணைக்களங்களும் நியதிச்சட்டநிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்** |
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு பற்றிய விடயங்களுடனும் மற்றும் 11 ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களுடனும் தொடர்பான விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயாரித்தலும், நடைமுறைப்படுத்தலும், தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>3.வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு | 1. வாணிபத் திணைக்களம்<br>2. வரையறுக்கப்பட்ட லங்கா சதொச<br>3. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம்<br>4. மகாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியம<br>5. இசைவு மதிப்பீடுகள் பற்றிய இலங்கை மதிப்பீட்டுச் சபை<br>6. அளவுக்கூறுகள் கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களம்<br>7. இலங்கைத் தேசியப் புலமைச்சொத்து அலுவலகம்<br>8. நுகர்வோர் அலுவல்கள் பற்றிய அதிகாரசபை<br>9. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் (கூட்டுறவு சங்கப் பதிவாளர்)<br>10. கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு<br>11. தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம்<br>12. உணவு ஆணையாளர் திணைக்களம் | • (1949 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க) கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனச் சட்டம்<br>• (1961 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க) வியாபாரிகளுக்கு உரிமமளித்தல் சட்டம்<br>• (1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க) மகாபொல உயர்கல்வி புலமைப் பரிசில் சட்டம்.<br>• (2005ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க) இசைவு மதிப்பீடுகள் தொடர்பான இலங்கை மதிப்பீட்டுச் சபைச் சட்டம்<br>• (1995ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க) புலமைச் சொத்துக்கள் சட்டம்<br>• (2003ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க) அளவீட்டுக்கூறு நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டம<br>• (2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க) நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்<br>• (1972ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க) கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சட்டம்<br>• 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம்<br>• (2001 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) தேசிய கூட்டுறவு |

| | | |
|---|---|---|
| நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைப்புச் செய்தல்<br>4. உள்நாட்டுச் சந்தையில் நுகர்வுப்பொருட்களை உயர்பண்புத் தரம்கொண்டதாகவும், பற்றாக்குறை இல்லாமலும் நியாயமான விலைக்கு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்<br>5. போதியளிவில், மற்றும் தொடர்ச்சியாக நியாயமான விலையில் உணவுகள் உள்ளிட்ட வேறு அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்குவதை உறுதிப்படுத்தல்<br>6. சந்தையில் சமநிலையின்மை ஏற்பட்டு பண்டங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்த்தல்<br>7. இறக்குமதி மற்றும் உள்நாட்டு உற்பத்திகள்மூலம் சந்தையில் தரமான பொருட்களை வழங்குதலை விஸ்தரித்தல்<br>8. சர்வதேச சந்தை உறவுகளை நடத்திச்செல்லல்<br>9. ஏலவிற்பனை நிலையங்கள் மற்றும் கண்காட்சிகளுக்காள பங்களிப்புகளை ஏற்பாடு செய்தல்<br>10. புலமைச் சொத்துக்கள் தொடர்பாக சர்வதேச சமவாயத்தை | | அபிவிருத்தி நிறுவக (கூட்டிணைத்தல்) சட்டம்<br>• மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத்தீர்வைகள் சட்டம். (2018 ஆம் ஆண்டின் இல. 2 )<br>• முற்பாதுகாப்பு ஏற்பாடு சட்டம் (2018 ஆம் ஆண்டின் இல. 3)<br>• (வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

| | | |
|---|---|---|
| நிர்வகிப்பதற்குரிய பணிகளின் வெளிப்படுத்தும் உரிமை மற்றும் சர்வதேச புலமைச் சொத்துக்களின் பணிகளின் வெளியீட்டு உரிமையின் இணைப்பு நவடிக்கைகள்<br>11. பேடன்ட் அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் முறைமையை வினைத்திறனாக்குதல்<br>12. நுகர்வுப் பண்டங்கள் சார்ந்த தேசிய விலைக் கொள்கைகளை வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும்<br>13. வர்த்தகப் போட்டிநிலைமையை உறுதிப்படுத்தி சந்தையில் ஏற்படும் அதிகரிப்பு மற்றும் குறைவுகளை குறைந்தபட்சத்தக்கக் கொண்டுவருதலும் அனைத்து ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் அதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.<br>14. தரமான பண்டங்களைக் ஆகக்குறைந்தமட்ட போட்டிவிலைகளில் தொடர்ச்சியாக வழங்குதலும் வழங்குநர்களின் ஏகபோக உரிமையை இல்லாமல் செய்த நுகர்வோரின் பாதக்காப்புக்கான நடவடிக்கைகளை எடுத்தல்<br>15. முனைப்பான கூட்டுறவுக் கட்டமைப்பினை மேலும் விஸ்தரித்து மக்களைக் கேந்திரமாகக் கொண்ட பல்வேறு பண்டங்கள் | | |

| | | |
|---|---|---|
| மற்றும சேவை நிலையங்களை விரிவுபடுத்தல்<br>16. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்குரிய பணிகளும்<br>17, II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களையும் கண்காணித்தல் | | |